# சமூக அறிவியல்

## பகுதி 2

## வகுப்பு VI

Social Science
Part 2
Std VI
Tamil Medium

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) கேரளம்

2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

6

# சமூக அறிவியல்

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பு நண்பர்களே,

இது ஆறாம் வகுப்பின் சமூக அறிவியல் பாடப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியாகும். இந்தப் பகுதி ஐந்து அலகுகளைக் கொண்டுள்ளது. 'தென்னிந்திய வரலாற்றை நோக்கி' என்ற அலகு தென்னிந்தியாவின் சமூக உருவாக்கம் மற்றும் கலாச்சார வாழ்க்கையுடன் தொடங்குகிறது. மேலும் பண்டைய கேரளாவில் நடைமுறையில் இருந்த ஆட்சி அமைப்புகளைப் பற்றியும் விவாதிக்கிறது.

'அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒரு முகவுரை' என்ற அலகில் அரசியலமைப்பு என்ற கருத்தின் தோற்றமும் பரிணாமமும் விவரிக்கப்படுகின்றன. நமது அரசியலமைப்பின் முகப்புரையும் இங்கு முக்கியமாகக் கூறப்படுகிறது. 'பெருங்கடல்கள் வழியாக' என்ற அலகில் பெருங்கடல்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவற்றின் சிறப்புகளை அறியவும் முடிகிறது. வங்கி என்ற நீதி நிறுவனத்தைப் பற்றியும் அன்றாட வாழ்வில் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் 'சேமிப்போம் பாதுகாப்போம்' என்ற அலகில் வலியுறுத்தப்படுகின்றது. 'ஜப்பான் : வரலாறும் நிகழ்காலமும்' என்ற கடைசி அலகில் ஜப்பானின் வரலாறும் தற்கால உலகப் பொருளாதார அமைப்பில் ஜப்பானின் இடமும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

கேரள பாடத்திட்ட கட்டமைப்பு 2023 இல் பரிந்துரைக்கப்பட்ட சமூக அறிவியல் அணுகு முறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்தப் பாடநூல், சமூக நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல்வேறு துறைகளில் மனித குலத்தின் வளர்ச்சி, மேம்பாடு இவற்றைக் கண்டறிந்து, அதைப் பயன்படுத்தி அறிவு உருவாக்கத்தை செயல்படுத்த இந்தப் பாடநூல் உதவும்.

**முனைவர் ஜெயபிரகாஷ் ஆர்.கே.**
இயக்குநர்
எஸ்.ஸி.இ.ஆர்.டி கேரளம்

# Textbook Development Team

## Advisor

**Dr. K. N. Ganesh**
Chairman,
Kerala Council for Historical Research

## Chairperson

**Dr. Abhilash Kumar K. G.**
Assistant Professor
Department of Political Science,
B.J.M. Govt. College Chavara, Kollam

## Experts

**Dr. Nandakumar B. V.**
Assistant Professor
Department of History,
Sri Narayana College, Kollam

**Dr. Antony Palakkal**
Professor & Head (Retd.)
Department of Sociology,
University of Kerala

## Participants

**Dr. Anjana V.R. Chandran,** Research Officer, SCERT Kerala
**Beena S. Nair,** UPST, GGHSS, Malayinkeezhu, Thiruvananthapuram
**Anil Kumar K.,** Headmaster, GHS Kandala, Thiruvananthapuram
**Priya S. S.,** P.D. Teacher, UPST.GGHSS Cottonhill, Thiruvananthapuram
**Ramdev P. R.,** HSST Geography, GHSS, Vellathuval, Idukki
**Nisha T. S.,** UPST SNVUPS, Marutamanpally, Kollam
**Pushpangadan U,** UPST (Retd.) GHSS Anchal (West) Punalur, Kollam
**John K.,** UPST (Retd.) Govt. V & HSS, Parassala, Thiruvananthapuram
**Rajan P.P.,** Trainer, BRC, Malappuram

## Tamil Translation

### Experts

**Dr. Santhi P.**
Professor, Dept. of Tamil,
University College,
Thiruvananthapuram.

**Dr. S. Rajendran**
Associate Professor in Tamil (Rtd.),
University College,
Thiruvananthapuram.

**Dr. M. Karunanidhi**
HSST,
GTHSS Chalai,
Thiruvananthapuram.

### Participants

**Mary Stella Rosaline K,** HST (Rtd.), GGHSS Karamana, Thiruvananthapuram.
**Daisy Rani R**, HST, PHSS Vandiperiyar, Idukki.
**Nirmala Princy Bell J**, HST (Rtd.), GV&HSS, Chalai, Thiruvananthapuram.
**V. Shunmuga Sundaram**, HSST (Rtd.), GHSS Kumily.

## Academic Coordinator

**Dr. Manju Sankar K.**
Research Officer, SCERT KERALA

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்** (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


8 தென்னிந்திய வரலாற்றை நோக்கி ........ 111

9 அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒரு முகவுரை ........ 125

10 பெருங்கடல்கள் வழியாக... ........ 137

11 சேமிப்போம்... பாதுகாப்போம்... ........ 151

12 ஜப்பான் : வரலாறும் நிகழ்காலமும் ........ 164


**இப்புத்தகத்தில் கற்றலை எளிமையாக்க சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**

- அதிக வாசிப்பு (மதிப்பிடத் தேவையில்லை)
- செயல்பாடு
- கலந்துரையாடலாம்
- பாத்திரநடிப்பு (ரோள்ப்ளே)
- தொடர்செயல்பாடு
- உருவாக்குவோம்
- தகவல் தொழில் நுட்பம்
- எழுதலாம்
- அட்டை உருவாக்கலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.




# தென்னிந்திய வரலாற்றை நோக்கி




காற்றாடிக்குன்னு அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்கள் 'வரலாற்றின் எஞ்சிய சின்னங்களைத் தேடி' என்ற கல்விச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக திருச்சூர் மாவட்டத்தில் கண்டாணசேரி, முனியாட்டுக்குன்னு, குடக்கல்லுபறம்பு ஆகிய இடங்களையும் சக்தன் தம்புரான் நினைவு அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டனர். பயணத்தின் போது கிடைக்கப்பெற்ற தகவல்களை உட்படுத்தி ரிச்சு  தயாரித்த பயண அனுபவத்தின் பகுதியை அறிந்து கொள்வோம்.

வரலாற்றின் எஞ்சிய சின்னங்களைத் தேடி ஒரு பயணம்...

ரிச்சு எஸ்.
வகுப்பு 6 பி
அரசு நடுநிலைப்பள்ளி காற்றாடிக்குன்னு

*நிரப்பான பகுதியிலிருந்து மலையின் மேலே.............*

*சிறிய புதர் காடுகள்....செங்குத்தான ஏற்றங்கள், பாறையிடுக்குகள்..... இவற்றையெல்லாம் தாண்டியே எங்களது பயணம். இந்தப் பயணம் உண்மையிலேயே எங்களை வியப்பில் ஆழ்த்தியது.*

*கற்களால் செய்யப்பட்ட குடைக்கற்கள், தொப்பிக்கற்கள், முனியறைகள் ஆகியவற்றை பல்வேறு இடங்களில் கண்டோம். குடை போன்று இருப்பவை குடைக்கற்கள், தொப்பி போன்று இருப்பது தொப்பிக்கல், குகை போன்று இருப்பவை முனியறைகள்...*

*பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த மனிதர்களால் கட்டப்பட்டவைகளே இவைகள். இந்த வரலாற்றின் எஞ்சிய சின்னங்களைக் குறித்து ஆசிரியர் எங்களுக்கு விரிவாகக் கூறினார்.*

*இவற்றைக் குறித்து மேலும் அறிந்து கொள்ள திருச்சூர் நகரத்தில் உள்ள சக்தன் தம்புரான் அருங்காட்சியகத்திற்கு நாங்கள் பயணம் செய்தோம். பல்வேறு இடங்களில் நாங்கள் பார்த்ததற்கு இணையான கல் நினைவுச் சின்னங்களின் சேகரிப்புகளும் மாதிரிகளும் அவற்றின் விளக்கங்களும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இத்தகைய கல் நினைவுச் சின்னங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட இரும்பு ஆயுதங்கள், கருவிகள், பாத்திரங்கள், அணிகலன்கள், நாணயங்கள் அனைத்தும் எங்களை வியப்பில் ஆழ்த்தின.*

நீங்களும் இது போன்ற கல்விச் சுற்றுலா சென்றிருக்கிறீர்களா? அந்த அனுபவங்களை எழுதி வெளியிட்டிருக்கிறீர்களா?

என்னென்ன வரலாற்றின் எஞ்சிய சின்னங்களைப் பற்றி ரிச்சு தனது பயண அனுபவத்தின் மூலம் விவரிக்கிறார்?

- குடைக்கல
-
-

இந்த வரலாற்றின் எஞ்சிய சின்னங்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்வோமா?

## பெரிய கற்காலம்

கருங்கல்லிலும், செங்கல்லிலும் செய்யப்பட்ட குடைக்கல், தொப்பிக்கல், முனியறைகள் போன்றவைகளே பெரிய கற்கால நினைவுச் சின்னங்கள் என்று அழைக்கப்படுகிறது (Megalithic Monuments). பெரிய கற்கள் கொண்டோ அடுக்குகளாலோ ஆனதால் அவை பெரிய கற்கால நினைவுச் சின்னங்கள் (மெகாலித்திக் காலம்) என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய கல் நினைவுச் சின்னங்கள் கட்டப்பட்ட காலகட்டம் பெரிய கற்காலம் (Megalithic Age) என்றும் அழைக்கப்படுகிறது.

பெரிய கற்காலத்தின் சான்றுகள் தென்னிந்தியாவின் பெரும்பாலான பகுதிகளிலும் காணப்படுகின்றன. கேரளாவில் மறையூர், சேரமனங்காடு, குப்பக்கொல்லி, மங்காடு தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் , கர்நாடகாவில் பிரம்மகிரி, ஆந்திரப்பிரதேசத்தில் நாகார்ஜுனகொண்டா ஆகிய பகுதிகள் தென்னிந்தியாவின் முக்கியமான பெருங்கற்கால மையங்களாகும்.

### தென் இந்தியா

இந்தியாவின் தெற்கு மாநிலங்களாகிய கர்நாடகா, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா ஆகியவைகளும் ஒன்றிய ஆட்சி பகுதிகளான பாண்டிச்சேரி, லட்சத்தீவு ஆகியவையும் உள்ளடக்கிய பகுதியே தென் இந்தியா.




படம் 8.1

பெரிய கற்கால நினைவுச் சின்னங்கள் பண்டைய காலத்தின் இறந்த உடலை அடக்கம் செய்யும் முறையோடு தொடர்புடையவை. இறந்த மனித உடல் உறுப்புகளை அடக்கம் செய்வதற்காக இத்தகைய கல் நினைவுச்சின்னங்கள் கட்டப்பட்டிருந்தன. பெரிய கற்கால நினைவுச்சின்னங்களிலிருந்து இரும்பு ஆயுதங்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டதால் இக்காலகட்டம் இரும்புக்காலம் என்றும் அழைக்கப்படுகிறது. மனித உறுப்புக்களின் எச்சங்களுடன் அவர்கள் பயன்படுத்தியிருந்த ஆபரணங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள், பாத்திரங்கள், நாணயங்கள் ஆகியவையும் பெருங்கற்காலச் சின்னங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் பெரிய கற்கால நினைவுச் சின்னங்கள் தொடர்பான கொடுக்கப்பட்ட பணித்தாளை நிரப்பவும்.

| | |
|---|---|
| முக்கிய பெரிய கற்கால நினைவுச் சின்ன மையங்கள் | • கேரளம் – மறையூர்<br>• தமிழ்நாடு –<br>• ஆந்திரப் பிரதேசம் –<br>• கர்நாடகா – |
| தென்னிந்தியாவில் முக்கிய பெரிய கற்கால நினைவுச் சின்னங்கள் | • குடைக்கல் •<br>• • |
| மனித உறுப்புக்களின் எச்சங்களுடன் புதைக்கப்பட்ட பொருட்கள் | • •<br>• • |

## தென்னிந்தியாவில் இரும்புக்காலம்



படம் 8.2 தமிழ்நாடு ஆதிச்சநல்லூரில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு ஆயதங்களும் கருவிகளும்

இரும்புக் காலத்தில் பயன்படுத்தியிருந்த பல்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் உள்ள ஆயுதங்கள், கருவிகள் ஆகியவற்றின் படத்தை உற்றுப்பார்க்கவும்.

இரும்பாலான கத்தி, வாள், அரிவாள், ஈட்டி, மூன்று கால் இருக்கை, விளக்குகள் போன்றவை இதில் உட்படும். இரும்பின் உபயோகம் பெரிய கற்காலத்தில் வேளாண் வளர்ச்சிக்கு உதவியது. உணவு சேகரிப்பிலிருந்து உணவு உற்பத்திக்கு முன்னேறிய மக்கள் இனத்தின் படைப்பே பெரிய கற்கால கலாச்சாரம்.

## தென்னிந்தியாவில் ஆட்சி உருவாக்கம்.




நிலப்படம் 8.1 பண்டைய தமிழகம்

நிலப்படம் 8.1 ஐ கவனியுங்கள், நிலப்படத்தில் நிறம் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் இன்று எந்த மாநிலங்களின் பகுதிகள் என்பதைக் கண்டறியவும்.

- கர்நாடகா
-
-
-

நிலப்படத்தில் நிறம் கொடுக்கப்பட்டுள்ள தென்னிந்தியப் பகுதிகள் பண்டையக்காலத்தில் 'தமிழகம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டிருந்தது. பண்டைய தமிழகத்தைப் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறும் முக்கிய வரலாற்று ஆதாரங்களே பழந்தமிழ்ப் பாடல்கள், நாணயங்கள், பயணக்குறிப்புகள், கல்வெட்டுகள் முதலியவை. இவற்றில் மிகவும் அதிகமான தகவல்கள் கிடைப்பது பழந்தமிழ் பாடல்களின் தொகுப்பான சங்க இலக்கியப் படைப்புகளிலிருந்தாகும்.

## சங்க இலக்கியம்

"யாதும் ஊரே! யாவரும் கேளீர்!
தீதும் நன்றும் பிறர் தர வாரா"

- புறநானூறு

(அனைத்தும் நம்முடைய நாடுதான். அனைவரும் நமது சகோதரர்களே. நன்மையோ, தீமையோ மற்றவர்களிடமிருந்து நமக்கு கிடைப்பதில்லை)

சங்க இலக்கியப் படைப்பான புறநானூற்றின் வரிகளே மேலே கொடுக்கப்பட்டுள்ளவை. மதுரையை மையமாகக் கொண்டு செயல்பட்ட தமிழ்க் கவிஞர்களின் குழுக்களே சங்கங்கள். இந்தச் சங்கங்கள் அன்றைய புலவர்களின் பாடல்களைச் சேகரித்துப் பாதுகாத்தன. அதனால் இந்தப் பாடல்கள் 'சங்க இலக்கியங்கள்' என்றும் இந்தக் காலகட்டத்தை 'சங்ககாலம்' என்றும் சிறப்பாக அழைக்கின்றனர். புறநானூறு போன்று பல இலக்கியப் படைப்புகள் சங்ககாலகட்டத்தில் இயற்றப்பட்டன. அவற்றில் சில முக்கிய படைப்புகளை அறிந்துகொள்ளலாம்.

**சங்கப் படைப்புகள்**

சங்கப்படைப்புகள் பொதுவாக அகப்பாடல்கள் எனவும் புறப்பாடல்கள் எனவும் இரண்டாகப் பிரிக்கப்படுள்ளன. குடும்ப வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் குறிப்பிடுவதே அகப்பாடல்கள். பொருளாதாரம், அரசியல் மற்றும் போர் வாழ்க்கையை குறிப்பிடுவது புறப்பாடல்கள்.




சங்க இலக்கியப் படைப்புகளைத் தவிர பண்டையத் தமிழகத்தை குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறும் பிற தமிழ் இலக்கியப் படைப்புகளே திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை.

### திருக்குறள்

தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த படைப்புகளில் ஒன்றாகும் திருக்குறள். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர்.

### சிலப்பதிகாரம்

கண்ணகி மற்றும் கோவலனின் கதையைச் சொல்லும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவார்.

### மணிமேகலை

கோவலன் மற்றும் மாதவியின் மகளான மணிமேகலையின் கதையைச் சொல்லும் ஒரு படைப்பாகும் மணிமேகலை; சீத்தலைச் சாத்தனார் என்பவரால் மணிமேகலை எழுதப்பட்டது.

பண்டைய தமிழகத்தைப் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறும் முக்கிய ஆதாரங்களைப் பட்டியலிடவும்.

- சங்க இலக்கியம்
- 
- 
- 

## சங்க காலத்தின் சமூக – பொருளாதார வாழ்க்கை

சங்க இலக்கியம் அடங்கிய பழந்தமிழ் பாடல்களில் பண்டைய தமிழகத்தின் மக்கள் வாழ்க்கைமுறை விவரிக்கப்பட்டுள்ளது. சமூக வாழ்க்கை, வேளாண்மை, கால்நடை மேய்த்தல், உப்புதயாரித்தல், பொருள் பரிமாற்றம் ஆகியவற்றைக் குறித்து இந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க காலத்தின் சமூக – பொருளாதார வாழ்க்கையின் சிறப்புகள் எவை என்பதை நாம் ஆராய்வோம்.

**சமூக வாழ்க்கை**

- தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரிவுகள் இருந்தன.
- சமூக வேறுபாடுகள் இருந்ததில்லை
- ஆண், பெண் சமத்துவம் நடைமுறையில் இருந்தது

**பொருளாதார வாழ்க்கை**

- வேளாண்மை முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது. கால்நடை மேய்த்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவை பிற வாழ்வாதாரங்களாயிருந்தன.
- வெளிநாடுகளுடன் வர்த்தக உறவுகள் இருந்தன.
- வெளிநாட்டினர் நல்ல மிளகையும், பிற வாசனைத் திரவியங்களையும் முக்கியமாக வாங்கினர். செம்பு, வெள்ளி, தங்கம் போன்றவற்றை அவர்கள் இங்கு கொண்டு வந்தனர்.

சங்ககால சமூக வாழ்க்கையை இன்றைய சமூக வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் குறிப்பு தயாரிக்கவும்.

## திணைகள்

இயற்கையை அடிப்படையாகக்கொண்டு பண்டைய தமிழகத்தில் ஐந்து நிலப் பிரிவுகள் இருந்தன என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை 'ஐந்திணைகள்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு திணையிலும் மக்களின் வாழ்க்கை முறையும் வாழ்வாதாரமும் திணைகளின் புவியியல் சிறப்புகளுக்கேற்ப வேறுபட்டு இருந்தன.

| திணைகள் | புவியியல் சிறப்புகள் | வாழ்வாதார வழிகள் |
|---|---|---|
| குறிஞ்சி | மலை | வன வளங்களின் சேகரிப்பு, வேட்டையாடுதல் |
| முல்லை | காடு | கால்நடை மேய்த்தல் |
| பாலை | வறண்ட பகுதி | களவு, கொள்ளையடித்தல் |
| மருதம் | வயல் பகுதி | வேளாண்மை |
| நெய்தல் | கடலோரப் பகுதி | மீன் பிடித்தல், உப்புத் தயாரித்தல் |

ஒவ்வொரு திணையிலும் உற்பத்திச் செய்யப்பட்டிருந்த பொருட்கள் பிற திணைகளோடு பரிமாற்றம் செய்யப்பட்டன. இத்தகைய பரிமாற்றம் வர்த்தக மையங்கள் உருவாக வழிவகுத்தன. இந்த வர்த்தக மையங்கள் அங்காடிகள் என அழைக்கப்பட்டன.

**அங்காடிகள் /சந்தைகள்**

பண்டைய தமிழகத்தில் சந்தைகளாக இருந்தது அல் அங்காடி (அல்லாலவணமும்) நாளங்காடியுமாகும். அல் அங்காடி அந்திச் சந்தையாகவும் நாளங்காடி பகல் சந்தையாகவும் இருந்தன. திணைகளில் அன்றாடத் தேவைகளுக்குள்ள பொருட்கள் இங்கு பரிமாற்றம் செய்யப்பட்டன.

திணைகளின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து குழுக்களாகப் பிரிந்து அவற்றின் புவியியல் சிறப்புகள், வாழ்வாதாரம் ஆகியவற்றை உட்படுத்தி ஒரு குறுநாடகம் தயாரித்து வழங்கவும்.

## அரசியல் அமைப்பு

நிலப்படம் 8.1 ஐ கவனிக்கவும். பண்டைய தமிழகத்தை ஆட்சி செய்தது யார்? யார்? என்பதை நிலப்படத்திலிருந்து கண்டுபிடிக்கவும்.

- சேரர்
- 
- 

பண்டைய தமிழகத்தை ஆட்சி செய்திருந்த சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்கள் 'மூவேந்தர்' அல்லது 'மூவரசர்' என்று அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் பல அரசாங்கங்கள் இருந்த போதிலும் மூவேந்தர்களுக்கே அதிகாரப்பதவி இருந்தது. இந்த அரசர்கள் 'கோ', 'கோன்', 'கடுங்கோ' என்றும் அழைக்கப்பட்டனர்.

நிலப்படம் 8.1 ஐ கவனித்து மூவேந்தர்களையும் அவர்களுடைய தலைநகரங்களையும் பட்டியலிடவும்.

| மூவேந்தர் | தலைநகரம் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

சங்ககாலத்திற்குப் பிறகு சேரர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகள் பிற்காலத்தில் கேரளமாக உருமாறியது.

## மகோதயபுரத்தில் பெருமாள்கள்

**CE 9** ஆம் நூற்றாண்டில் இன்றைய கொடுங்கல்லூருக்கு அருகிலுள்ள மகோதயபுரத்தை (மகோதை) தலைமையிடமாகக் கொண்டு பெருமாள் ஆட்சி நிறுவப்பட்டது. பெருமாள்கள் பிற் காலத்தில் சேரர் என்று அழைக்கப்பட்டனர். இங்குள்ள அரசர்கள் பெருமாள், சேரமான், குலசேகரர் போன்ற ஆட்சிப் பெயர்களைப் பெற்றிருந்தனர்.

### மகோதயபுரம்

C.E 9 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்திருந்த பெருமாள்களின் தலைநகரமாக மகோதயபுரம் இருந்தது. மகோதயபுரம் அறிவியல், கலாச்சாரம் ஆகியவற்றின் முக்கிய மையம் என்ற நிலையில் தென் இந்தியா முழுவதும் பிரபலமாக இருந்தது. ராமராஜசேகரன், ஸ்தாணு ரவி, இந்துகோதா, பாஸ்கர ரவி ஆகியோர் இங்கிருந்த முக்கிய ஆட்சியாளர்களாவர்.

## பெருமாள் ஆட்சி

பெருமாள் ஆட்சிக் காலத்தில் ராஜ்ஜியம் பல்வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நாடுகள் தேசங்களாகவும், தேசங்கள் கரைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நாடுகளை ஆட்சி செய்தவர்கள் நாடுவாழிகளும் தேசங்களை ஆட்சி செய்தவர்கள் தேசவாழிகளுமாவர். தேசவாழிகள் மக்களாட்சிப் பண்புள்ள தேசக்குழுக்களின் கட்டுப்பாட்டில் ஆட்சி செய்தனர். கரைகளை ஆட்சி செய்தது பஞ்சாயத்துகள் ஆகும். ஆட்சியில் மிகவும் உயர்ந்த பதவியை பெருமாள் வகித்தார்.

பெருமாள் ஆட்சி நிர்வாகம் தொடர்பான கருத்து வரைபடத்தை நிரப்பவும்.

| | |
|---|---|
| பெருமாள் ராஜ்ஜியம் | பெருமாள் |
| நாடுகள் | ............................................ |
| தேசங்கள் | ............................................ |
| கரைகள் | ............................................ |

## பொருளாதார முன்னேற்றம்

வலிமையான பொருளாதார அடித்தளம் பெருமாள் ஆட்சிக் காலத்தில் இருந்தது. வேளாண்மையோடு வர்த்தகமும் அந்தக் காலத்தில் செழிப்பாகயிருந்தது. வெளிநாடுகளுடனான வாசனைத் திரவிய வர்த்தகமும் துறைமுகங்கள் மூலம் கிடைத்த சுங்க வரியும் பெருமாள் ராஜ்ஜியத்தின் பொருளாதார மாற்றங்களுக்குக் காரணமாயின. அந்தக் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் இருந்த அஞ்சுவண்ணம், மணி கிராமம், வளஞ்சியர், நானாதேசிகர் போன்ற வர்த்தகக் குழுக்களின் வணிகச் செயல்பாடுகள் இந்தப் பகுதியின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவின.

## கலாச்சார வாழ்க்கை

பெருமாள் ஆட்சிக்காலத்தில் கலாச்சாரத் துறையிலும் பெரும் அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டன.

**கலாச்சார வாழ்க்கை**

- வேளாண் கிராமங்களின் மையம் என்ற முறையில் கோயில்கள் கலாச்சார வாழ்க்கையின் முக்கிய நிறுவனங்களாக மாறின.
- பிறப்பு முதல் ஒரு தொழிலை மட்டுமே ஒவ்வொருவரும் பாரம்பரியமாகச் செய்து வந்ததால் ஜாதி முறை தோன்றியது.
- கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனம், சங்கீதம் போன்ற பல்வேறு கலைகள் கோயில்களை மையமாக வைத்து வளர்ந்தன.
- சடங்குக் கலைகளான கூத்தும் கூடியாட்டமும் இக்காலத்தில் வளர்ந்தன.



படம் 8.3 கூத்து



படம் 8.4 கூடியாட்டம்



பெருமாள் ஆட்சிக்காலத்தில் கலாச்சாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கும் படங்களைச் சேகரித்து தலைப்புகளுடன் கூடிய ஆல்பம்/டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.

12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெருமாள்களின் ஆட்சி சிதைந்துவிட்டது. அத்துடன் அவர்களது ஆட்சியின் கீழிருந்த பகுதிகளில் அரசியல் ஒற்றுமை இல்லாமல் போனது. அதைத் தொடர்ந்து பெருமாள்களின் பகுதிகளாகயிருந்த பலநாடுகளும் சுதந்திரமாயின.

## நாடுவாழிச் சொரூபங்கள்

பெருமாள்களினுடைய பகுதிகளாகயிருந்த நாடுகள், பிற்காலத்தில் நாடுவாழிகளின் கீழ், நாடுவாழிச் சொரூபங்கள் என்று அழைக்கப்பட்டன. மருமக்கத் தாயம் அமைப்பின்படி இருந்த சுயாட்சிப் பகுதிகளே சொரூபங்கள். மருமக்கத்தாயத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குடும்பங்கள்தான் சொரூபங்களைக் கட்டுப்படுத்தியிருந்தன.



**மக்கள் தாயமும் மருமக்கள் தாயமும்**

பண்டைய காலத்தில் கேரளாவில் இருந்த மரபுமுறை வாரிசுரிமை முறைகளே மக்கள் தாயமும் மருமக்கள் தாயமும். வாரிசுரிமை மரபு வழியாக தந்தையிடமிருந்து பிள்ளைகளுக்கு கைமாற்றம் செய்யும் முறையே மக்கள் தாயம். ஆனால் தாயின் சகோதரனிடமிருந்து பிள்ளைகளுக்கு வாரிசுரிமை மரபு வழியாக கைமாற்றம் செய்யும் முறையே மருமக்கள் தாயம்.

நாடுவாழிச் சொரூபங்களில் முக்கியமானவை கோலத்து நாடு (கண்ணூர்) நெடியிருப்பு (கோழிக்கோடு), பெரும்படப்பு (கொச்சி), திருப்பாப்பூர் (வேணாடு). நாடுவாழி ஆட்சியின் பரவலோடு ஜென்மி முறை பரவியது. இடைக்கால கேரளத்தின் சமூகப் – பொருளாதார – அரசியல் அமைப்புகளைக் கட்டுப்படுத்தியிருந்த அமைப்பே ஜென்மி முறை. ஜென்மிமுறை பரவியதன் விளைவாக நாடுவாழிச் சொரூபங்கள் வளர்ந்து வந்தன.




நிலப்படம் **8.2** முக்கிய நாடுவாழிச் சொரூபங்கள்

## இடைக்காலக் கேரளாவின் நாடுகள்




நிலப்படம் 8.2 ஐ கவனித்து கேரளாவில் இருந்த முக்கியமான நாடுவாழிச் சொரூபங்கள் எவை என்பதைப் பட்டியலிடவும்.

- 
- 
- 
- 

முக்கிய நாடுவாழிச் சொரூபங்களைப் பற்றிக் கூடுதல் தகவல்களை அறிந்துகொள்வோம்.

- **கோலத்து நாடு சொரூபம்**
  - கண்ணூரை மையமாகக் கொண்ட ஆட்சி
  - ஆட்சியாளர் 'கோலத்திரி' என்று அறியப்பட்டார்
- **நெடியிருப்பு சொரூபம்**
  - கோழிக்கோட்டை மையமாகக் கொண்ட ஆட்சி
  - ஆட்சியாளர் 'சாமூதிரி' என்று அழைக்கபட்டார்
  - மாமாங்கத்தின் பாதுகாவலன் பதவி கிடைத்ததோடு சாமூதிரியின் புகழ் அதிகரித்தது.
- **பெரும்படப்பு சொரூபம்**
  - கொடுங்கல்லூர் பகுதியே பெரும்படப்பு சொரூபமாக மாறியது
  - பிற்காலத்தில் கொச்சி 'ராஜவம்சம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது.
- **திருப்பாப்பூர் சொரூபம் (வேணாடு)**
  - கேரளாவின் தென்முனையில் அமைந்திருந்த சொரூபம்
  - பின்னர் திருவிதாங்கூர் என்ற பிரபல நாட்டரசாக உருவெடுத்தது

வேணாடு திருவிதாங்கூர் என்ற வலிமைமிக்க ஒரு நாட்டரசாக வளர்ந்தது அனிழம் திருநாள் மார்த்தாண்டவர்மாவின் காலத்திலாகும். சக்தன் தம்புரான் பெரும்படப்பு சொரூபத்தை கொச்சி ராஜ்யமாக மாற்றினார்.

மார்த்தாண்டவர்மா மற்றும் சக்தன் தம்புரான் ஆகியோரின் சில சீர்திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளதை கவனிக்கவும்.

**மாமாங்கம்**

பாரதப்புழை நதிக்கரையில் உள்ள திருநாவாயில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் ஒரு திருவிழா ஆகும். வள்ளுவ நாட்டின் ஆட்சியாளராக இருந்த வள்ளுவகோனாதிரியிடமிருந்து மாமாங்கத்தின் தலைமைப் பொறுப்பை பிற்காலத்தில் சாமூதிரி கைப்பற்றினார்.

| அனிழம் திருநாள் மார்த்தாண்டவர்மா |
|---|
| நிலப்பிரபுக்களான எட்டு வீட்டில் பிள்ளைமார்களையும் மாடம்பிமார்களையும் அடக்கினார். |
| நாட்டின் நிலம் அளந்து திட்டப்படுத்தப்பட்டது |
| திருப்படித்தானம் நடத்தப்பட்டது |

| சக்தன் தம்புரான் |
|---|
| நாடுவாழிகளை அடக்கினார் |
| வணிக மையங்களைத் தொடங்கினார் |
| திருச்சூர் பூரம் தொடக்கப்பட்டது |

**திருப்படித்தானம்**

1750 ஜனவரி 3-ஆம் தேதி அன்று அனிழம் திருநாள் மார்த்தண்டவர்மா திருப்படித்தானம் நடத்தினார். திருவிதாங்கூரின் குலதெய்வமாயிருந்த ஸ்ரீபத்மநாபனுக்கு தன்னுடைய அதிகாரத்தின் அடையாளமாகயிருந்த உடைவாளை பாதத்தில் வைத்து அவர் பத்மனாபதாசனாக மாறியதே திருப்படித்தானம் என்று அழைக்கப்படுகிறது. இது நிலப்பிரபுக்களின் அதிகமான அச்சுறுத்தலை எதிர்கொள்ளுவதற்காக மார்த்தாண்ட வர்மா திருவிதாங்கூர் ஆட்சியில் கொண்டு வந்த மாற்றங்களின் ஒரு பகுதியாகும்.

பண்டைய தமிழகத்தின் பகுதியாயிருந்த கேரளம் பெருமாள்களின் ஆட்சியின்போது ஒரு தனி அரசியல் பகுதியாக உருவானது. இருப்பினும் பெருமாள் ஆட்சியின் வீழ்ச்சி அந்த அரசியல் ஐக்கியத்தை சிதைத்தது. சுதந்திர சுய ஆட்சிப் பிரதேசங்களாக நாடுவாழிச் சொரூபங்கள் உருவாயின: இது இடைக்கால கேரளாவின் சமூகப்–பொருளாதார – அரசியல் உறவுகளை மாற்றி அமைத்தது. பிற்காலத்தில் இந்த நாடுவாழிச் சொரூபங்களிலிருந்து உருவான நாட்டரசுகள் ஒன்றிணைக்கப்பட்டு இன்றைய கேரளம் உருவானது.

## தொடர் செயல்பாடுகள்

- கேரளாவின் பெருங்கற்கால கல்நினைவுச்சின்னங்களின் படங்களையும் தகவல்களையும் சேகரித்து ஆல்பம்/டிஜிட்டல் ஆல்பம் தயாராக்கி வகுப்பில் வெளியிடவும்.
- சங்ககாலச் சமூகப் – பொருளாதார – அரசியல் வாழ்க்கையைக் குறித்துக் கருத்தரங்கு நடத்தவும்.

  **துணைத் தலைப்புக்கள்**

  - சமூக வாழ்க்கை
  - பொருளாதார வாழ்க்கை
  - திணைகள்
  - அரசியல் அமைப்பு
- சமூக அறிவியல் மன்றத்தின் ஆதரவில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் மாதிரிகளை உருவாக்கி பள்ளியில் காட்சிப்படுத்தவும்.
- பெருமாள் ஆட்சிக்காலத்தில் செழித்து வளர்ந்த பல்வேறு கலைகள் தொடர்பான படங்களையும் தகவல்களையும் சேகரித்து காணொளி விளக்கக் காட்சி (Video presentation) தயாரிக்கவும்.

  *குறிப்புகள்:*
  கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனம், சங்கீதம், போன்றவை.








இந்திய அரசியலமைப்புச் சட்டம்

முகவுரை

இந்திய மக்களாகிய நாம் இந்தியாவைஓர் [1][இறையாண்மை, சமதர்ம, மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக] நிறுவ அந்த நாட்டு மக்களுக்கு:

சமூக, பொருளாதார அரசியல் நீதியையும்;

சிந்தனைக் கருத்து வெளியீடு, நம்பிக்கை, சமய வழிபாடு போன்றவைகளுக்கான **சுதந்திரம்:**

பதவியிலும், வாய்ப்பிலும் சமத்துவமும் அடைதற்கும்;

அவர்களுக்கிடையில்

தனிநபர் கண்ணியத்தையும் [2][தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டையும்] உறுதிப்படுத்த அனைவரிடத்திலும் சகோதரத்துவத்தை ஊக்குவித்திட;

உள்ளார்ந்த உறுதியுடையவராய்;

நம்முடைய அரசியலமைப்பு உருவாக்க சபையும் இந்த 1949 நவம்பர் 26 ஆம் நாள் நமது அரசியலமைப்பு உருவாக்க சபை தயாரித்த அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்று சட்டமாக்கி நமக்கு தருகின்றது.

1. 1976 - அரசியலமைப்புச் சட்டம் (42 –வது சட்டதிருத்தம்) சட்டம் 2-ஆம் பிரிவுப்படி "இறையாண்மை ஜனநாயக குடியரசு" என்பதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது (3.1.1977 முதல் அமுலுக்கு வந்தது).
2. மேல் கூறப்பட்ட சட்டம் 2-ஆம் பிரிவுப்படி "நாட்டின் ஒருமைப்பாடு" என்பதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது (3.1.1977 முதல் அமுலுக்கு வந்தது).

# 9

# அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒரு முகவுரை



படம் 9.1

மேலே தரப்பட்டுள்ள படங்களைக் கவனிக்கவும்

இவைகளில் சமூகத்திற்கு ஏற்ற நன்னடத்தையைக் குறிக்கும் படத்திற்கு எமோஜி 🙂 வரையவும்.

எந்தெந்த வரைபடத்திற்கு நீங்கள் எமோஜி வரைந்தீர்கள்? ஏன்?

எந்த ஒரு சமூகத்திற்கும் சீராகவும் நிலையாகவும் வாழ்வதற்கும் வளர்ச்சியடைவதற்கும் சட்ட ஒழுங்கை கடைபிடிக்க வேண்டியது மிகத்தேவையாகும்.

கல்வி நிலையங்களிலும் பொது இடங்களிலும் நாம் சில சட்ட ஒழுங்கை கடைபிடிக்கின்றோம் என்று நீங்கள் முந்தைய வகுப்பில் அறிந்துகொண்டீர்களல்லவா?

நமது நாடு பெரும் நிலப்பரப்பையும், அதிக மக்கள் தொகையையும், பல இன மக்களையும் கொண்டு ஒன்றாக வாழும் நாடாகும். சில சட்டங்களையும் சட்ட ஒழுங்கையும் கடைப்பிடித்தே இப்படியுள்ள பன்முகத்தன்மையைக் கொண்ட நமது நாடு முன்னோக்கிச் செல்கின்றது. இதைப் போன்று பல்வேறு நாடுகளுக்கு அவை நிலைநிற்பதற்கும் ஆட்சி செய்வதற்கும் உதவுகின்ற அடிப்படைத் தத்துவங்கள் அடங்கின ஒருங்கிணைக்கப்பட்ட வடிவமே அரசு அமைப்புச் சட்டம்.

ஒரு நாட்டில் அரசை அமைப்பதற்கும் செயல்படுவதற்கும் தேவையான அடிப்படைச் சட்டங்கள், தத்துவங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கின அதிகாரப்பூர்வமான ஆவணமே அரசு அமைப்புச் சட்டம்.

பாலவிளை நடுநிலைப்பள்ளி மாணவர்கள் சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் ஒரு வழக்கறிஞருடன் நடத்தின நேர்காணலைக் கவனிக்கவும்.




படம் 9.2

நேர்காணலில் அரசு அமைப்புச் சட்டத்துடன் தொடர்புடைய எந்தெந்த கருத்துகள் உட்பட்டுள்ளன.

- நாட்டின் ஆட்சிமுறை
- 
- 
- 

## அரசு அமைப்புச் சட்டத்தின் முன்னோடிகள்

அரசு அமைப்புச் சட்டம் என்ற கருத்து தோன்றுவதற்குக் காரணமான வரலாற்றுச் சூழல் எவை எனக் காண்போம்.

### ஹமுராபியின் சட்டத்தொகுப்பு

உலகின் மிகப்பழமையான சட்ட விதிகளில் ஒன்றே பழங்கால பாபிலோனின் ஆட்சியாளராக இருந்த ஹமுராபியின் (B.C.E. 1792-1750) சட்டத்தொகுப்பு. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டங்களை எதிர்ப்பதற்கு ஒருவருக்கும் அதிகாரமில்லை என்று இச்சட்டத் தொகுப்பு கூறுகின்றது.



படம் 9.3

### மாக்னா கார்ட்டா



படம் 9.4

இங்கிலாந்து மக்கள் மன்னர்களின் கொடுங்கோல் ஆட்சியால் சலித்துப் போயிருந்தனர். இதற்கு எதிராக CE 1215-ஆம் ஆண்டு ஜான் மன்னரை மக்கள் கட்டாயப்படுத்தி ஒப்பிடச் செய்த உடன்படிக்கையே மாக்னா கார்ட்டா. மன்னரும் ஆட்சி அமைப்பும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்று இந்த உடன்படிக்கை விளக்குகிறது. மாக்னா கார்ட்டா மனித உரிமை வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

### மாபெரும் புரட்சி

17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் விருப்பங்களுக்கு எதிராகச் செயல்பட்ட மன்னர்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையே பல்வேறு போராட்டங்கள் ஏற்பட்டன. அதில் முக்கியமானது CE 1688 ஆம் ஆண்டின் மாபெரும் புரட்சி. இப்புரட்சியின் விளைவாக மன்னரின் ஏகாதிபத்தியத்திற்கு முடிவு கட்டுவதற்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கும் இயன்றது. மன்னரின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. இங்கிலாந்தில் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் அரசு அமைப்புச் சட்டம் உருவாவதற்கு இது காரணமானது.



படம் 9.5

### அமெரிக்க சுதந்திர விளம்பரம்



படம் 9.6

இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிலிருந்த 13 வடஅமெரிக்க காலணிகள் இங்கிலாந்தின் தவறான கொள்கைகளுக்கு எதிராகப் போராடினர். அதைத் தொடர்ந்து CE 1776-ஆம் ஆண்டு இந்தக் காலனிகள் வெளியிட்ட சுதந்திர விளம்பரமே அமெரிக்க சுதந்திர விளம்பரம். அரசை அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மக்களுக்கு அதிகாரமுண்டு என்பதைப் புரியவைப்பதற்கு இவ்விளம்பரத்திற்கு இயன்றது. உலகில் எழுதப்பட்ட முதல் அரசியல் அமைப்புச் சட்டமான அமெரிக்க அரசு அமைப்புச் சட்டம் உருவாவதற்கு இது காரணமானது.

## பிரெஞ்சுப் புரட்சி



படம் 9.7

1789–ஆம் ஆண்டு பிரெஞ்சு மக்கள் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற முத்திரைச் சொற்களை முழக்கி நடத்தின புரட்சியாகும். இப்புரட்சியின் விளைவாக மன்னராட்சிக்கு எதிரான மக்களின் பரமாதிகாரம் என்ற கருத்து அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறு பிரெஞ்சு நாட்டில் ஓர் அரசு அமைப்புச்சட்டம் உருவாகவும் அதன்படி மன்னரின் அதிகாரங்கள் அரசு அமைப்புச் சட்டங்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

மேலே கூறப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளிலிருந்து மக்கள் நலனுக்கும் வளர்ச்சிக்கும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட சட்டவிதி தேவையாகும் என்று அறிந்துகொண்டீர்களல்லவா? அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக மக்கள் நடத்தின போராட்டங்களே அரசு அமைப்புச் சட்டம் உருவாவதற்குக் காரணமாயின.

**பணித்தாளை நிறைவு செய்யவும்**

| | |
|---|---|
| அரசரின் அதிகாரங்கள் அரசு அமைப்புச் சட்டங்களின் கட்டுப்பாட்டிற்குள்ளானது. | பிரெஞ்சுப் புரட்சி |
| உலகில் எழுதப்பட்ட முதல் அரசு அமைப்புச் சட்டம் | |
| வரலாற்றில் மிகவும் பழைமையான சட்டத் தொகுப்பு | |
| மன்னரின் ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்ததுடன் நாடாளுமன்றத்தின் அதிகாரம் அதிகரிக்கவும் செய்தது | |
| மனித உரிமைகளின் வரலாற்றில் ஒரு மைல்கல் | |

## பல்வகை அரசு அமைப்புச் சட்டங்கள்

அரசு அமைப்புச் சட்டங்களின் பண்புகள், சட்டத் திருத்தம் செய்யும் முறை, உருவாகின முறை என்பவைகளின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கலாம்.



| எழுதப்பட்டது | எழுதப்படாதது |
|---|---|
| ஒரு நாட்டின் அடிப்படைக் கொள்கைகளும் சட்டங்களும் சரியான முறையில் புத்தக வடிவில் தொகுக்கப்பட்டதே எழுதப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம்.<br>எ.கா: இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) | ஒரு நாட்டின் அடிப்படைக் கொள்கைகளும் சட்டங்களும் சரியான முறையில் எழுதப்படாததும் புத்தக வடிவில் தொகுக்கப்படாததும் ஆனதே எழுதப்படாத அரசியல் அமைப்புச் சட்டம்.<br>எ.கா: யுனைடெட் கிங்டம் (UK)<br>நியூசிலாந்து |
| **உறுதியானது** | **நெகிழ்வானது** |
| மாற்றம் கொண்டு வருவதற்கு (சட்ட திருத்தம்) கண்டிப்பான செயல்பாடுகள் தேவையான அரசியல் அமைப்புச் சட்டம்<br>எ.கா: அமெரிக்க ஐக்கிய நாடுகள்,<br>ஆஸ்திரேலியா | எளிதில் மாற்றம் கொண்டு வர (சட்டத்திருத்தம்) இயலுகின்ற அரசியல் அமைப்புச் சட்டம்<br>எ.கா: யுனைடெட் கிங்டம்,<br>நியூசிலாந்து |
| **நடைமுறைக்கு வந்தது** | **பரிணாமம் அடைந்தது** |
| அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்க சபை அல்லது குழுவின் உருவாக்கத்திற்குப் பின் எழுதப்பட்டு அமுல்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம்<br>எ.கா: அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA),<br>இந்தியா | படிப்படியான மாற்றங்களின் விளைவாக உருவான அரசியல் அமைப்புச் சட்டம். ஒப்பந்தங்கள், நீதி நியாயங்கள், சட்டங்கள், மரபு முறைகள் போன்ற வடிவிலான முறைகளும் பழக்கவழக்கங்களும் இதில் உட்படும்.<br>எ.கா : யுனைடெட் கிங்டம், கனடா |



பாடப்பகுதியில் எடுத்துக்காட்டுகளாகத் தரப்பட்டுள்ள நாடுகளை அரசியல் அமைப்புச் சட்டங்களுடைய சிறப்புகளின் அடிப்படையில் அட்டவணையை ஒழுங்குபடுத்தவும்.

| எழுதப்பட்டது | எழுதப்படாதது | உறுதியானது | நெகிழ்வானது | நடைமுறைக்கு வந்தது | பரிணாமம் அடைந்தது |
|---|---|---|---|---|---|
| | | | | | |

பலவகை அரசியல் அமைப்புச் சட்டங்களைக் குறித்து அறிந்துகொண்டீர்களல்லவா! இனி நாம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு இருக்கவேண்டிய பண்புகள் எவை எனக் காண்போம்.




'அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு இருக்க வேண்டிய பண்புகள்' என்ற தலைப்பில் சிறுகுறிப்பு தயாரிக்கவும்.

## அரசியல் அமைப்புச் சட்ட முறை

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொதுச்சிறப்புகளை நாம் அறிந்துகொண்டோமல்லவா? இனி நாம் அரசியல் அமைப்புச் சட்டமுறை என்றால் என்ன என்று சோதனை செய்வோம்.



ஆசிரியர் : மனு, சாலை விதிகளை மீறி சைக்கிள் ஓட்டினதைப் பார்த்தேன். இனி அவ்வாறு செய்யக்கூடாது.

மனு : மன்னியுங்க டீச்சர்; சைக்கிள் ஓட்டுபவர்கள் சாலை விதிகளை அனுசரிக்க வேண்டுமா?

ஆசிரியர் : அனைவரும் போக்குவரத்துச் சட்டத்தை அனுசரிக்க வேண்டும். அது சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும்.

ஆசிரியருக்கும் மனுவிற்கும் இடையே நடைபெற்ற உரையாடலைக் கவனித்தீர்களல்லவா?

ஆட்சியாளர்களும் சட்டங்களை அனுசரிக்க வேண்டும் என்பதை அறிந்துகொண்டீர்களல்லவா? தனி மனிதர்களை சட்டங்கள் கட்டுப்படுத்துவதைப்போல் ஆட்சியாளர்கள்மீதும் சட்டம் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. எல்லையற்ற அதிகாரங்களை ஆட்சியாளர்களுக்கு வழங்கினால் அது மக்களின் சுதந்திரத்தைக் கெடுத்து ஏகாதிபத்தியத்திற்கு வழிவகுக்கும். இதற்கு எதிராகவே அரசியல் அமைப்பு சட்டமுறை நிலை கொள்கிறது. அரசின் அதிகாரங்களை அரசியல் அமைப்புச் சட்டப்படி, கட்டுப்படுத்துகின்ற அரசு முறையே அரசியல் அமைப்புச் சட்டமுறை.

ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்துதல், சட்ட ஒழுங்கை உறுதி செய்தல், மக்களின் உரிமைகளை வரையறுத்தல் போன்றவை அரசியல் அமைப்புச் சட்ட முறையில் உட்படுகின்றன.

**அரிஸ்டாட்டிலும் அரசியல் அமைப்பு விதிகளும்**

அரசியல் அமைப்புச் சட்டம், அரசியல் அமைப்புச் சட்டமுறை என்பவைகளைக் குறித்து முதன் முதலில் விளக்கியவர் அரிஸ்டாட்டில் ஆவார். "ஒரு நாட்டில் ஆட்சியாளர்களின் சீரமைப்பு" என்பதுவே அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவர் அளித்த முதல் வரையறை. அவர் சட்டங்களைச் சாதாரண சட்டங்கள், அரசியல் அமைப்புச் சட்டங்கள் என்று இரண்டாகப் பிரித்தார்.

கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் அரசியல் அமைப்புச் சட்டமுறைக்குப் பொருத்தமான கூற்றிற்கு நிறம் அளிக்கவும்.

| | |
|---|---|
| ஆட்சியாளரின் அதிகாரங்களுக்கு எல்லையைத் தீர்மானிக்கிறது. | ○ |
| குடிமக்களின் உரிமைகளை வரையறுக்கிறது. | ○ |
| ஏகாதிபத்தியத்தை ஊக்குவிக்கிறது. | ○ |
| ஆட்சியாளருக்கு எல்லையில்லா அதிகாரங்களை வழங்குகிறது. | ○ |
| சட்ட ஒழுங்கை உறுதிசெய்கின்றது. | ○ |

ஒவ்வொரு நாட்டிலும் நடந்த நீண்ட செயல்பாட்டின் பலனாக அரசியல் அமைப்புச் சட்டம் உருவானது. நம் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரலாறும் வேறுபட்டதல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவானது எவ்வாறு என்று சோதனை செய்வோம்.

## இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

**குடியரசுத் தலைவரின் சத்திய பிரமாணம் அல்லது உறுதிமொழி**

" ........... என்ற நான் உண்மையுடன் பாரதக் குடியரசுத்தலைவரின் பணிகளைச் செய்வேன். (அல்லது குடியரசுத்தலைவரின் கடமைகளைச் செய்வேன்) என்றும் என் திறமைக்கு ஏற்றவாறு அரசியலமைப்புச் சட்டத்தையும் விதிகளையும் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் கடைபிடிக்கவும் செய்வேன் என்றும் பாரத மக்களுக்குச் சேவை செய்யவும் அவர்களுக்கு நலன் வருவதற்காகவும் என்னை அர்பணித்துள்ளேன் என்றும் இறைவன் பெயரில் சத்தியமாக உறுதியளிக்கிறேன்."

ஆதாரம் இந்திய அரசியல் அமைப்புச்சட்டம்

குடியரசுத் தலைவரின் உறுதிமொழியைக் கவனியுங்கள். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் முக்கியத்துவம் இதில் விளக்கப்பட்டுள்ளது. நமது அரசியலைப்புச் சட்டம் உலகின் மிகப்பெரியதும், எழுதப்பட்டதுமான அரசியல் அமைப்புச் சட்டமாகும். அது எவ்வாறு தோன்றியது என்பதைச் சோதனை செய்வோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஆரம்பம் ஆங்கில ஆட்சியின் கீழிருந்த இந்திய வரலாற்றுடன் தொடர்புள்ளது.

| | |
|---|---|
| ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி | இந்தியாவுடன் வியாபார உறவை ஏற்படுத்துவதற்காக CE 1600- ஆம் ஆண்டு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது. வியாபாரத்திற்காக வந்த ஆங்கிலேயர் படிப்படியாக அதிகாரிகளாக மாறியதன் விளைவாக இந்தியாவின் ஆட்சி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழ் வந்தது. |
| 1857-ஆம் ஆண்டின் முதல் இந்திய சுதந்திரப் போர் | ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்கள் நடத்திய முதல் பொது மக்கள் போராட்டம். இது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வரக் காரணமானது. இதைத்தொடர்ந்து இந்தியாவின் ஆட்சி இங்கிலாந்து ராணியின் நேரடிக் கட்டுபாட்டிற்குள் வந்தது. |
| இந்திய கௌன்சில் சட்டங்கள் | ஆங்கில இந்தியாவின் (பிரிட்டீஷ் இந்தியாவின்) ஆட்சியில் இந்தியர்களின் பங்களிப்பை உறுதிசெய்ய உதவிய சட்டங்கள். |
| சுதந்திரப் போராட்ட இயக்கங்கள் | இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்த இயக்கம் இந்திய தேசியக் காங்கிரஸ் ஆகும். இவ்வியக்கம் இந்தியாவிற்கு ஒர் அரசியலமைப்புச் சட்டத்தை தயாரிப்பதற்கு ஒரு சுதந்திர அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை வேண்டும் என்ற கோரிக்கையை அதிகாரபூர்வமாக முன்மொழிந்தது. |
| இந்திய அரசுச் சட்டங்கள் | ஆட்சிக் காரியங்களில் இந்தியர்களின் பங்களிப்பை படிப்படியாக அதிகரிப்பதற்கும் இந்தியாவில் வலிமை வாய்ந்த ஆட்சியை உறுதிசெய்வதற்காகவும் ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சட்டங்கள் |
| அமைச்சரவைக் குழு | இந்தியாவிற்கு முழுமையான சுயாட்சி அதிகாரம் வழங்குவதற்காக அமைச்சரவைக் குழுவை ஆங்கில அரசு இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. இதன்படி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக 1946 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை நடைமுறைக்கு வந்தது. |

டாக்டர் இராஜேந்திரபிரசாத் அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபையின் தலைவர் ஆவார். டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர் தலைவராக இருந்த வரைவு குழுவே அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவு வடிவத்தை எழுதித் தயாரித்தது. அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் சபை 1949 நவம்பர் 26 ஆம் நாள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தது. எனவே நவம்பர் 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்ட நாளாக அனுசரிக்கப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்டம் அதிகாரபூர்வமாக அமுலுக்கு வந்தது. அன்றுமுதல் இந்தியா ஓர் இறையாண்மையுடைய மக்களாட்சி குடியரசு என்று அறியப்படுகிறது.

**அமைச்சரவைக் குழு**
**(Cabinet Mission)**

இந்தியாவிற்கு இறையாண்மையை கைமாற்றம் செய்வது குறித்து இந்திய தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்காக ஆங்கில அரசு நியமித்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவே அமைச்சரவைக் குழு. இந்தியாவின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுடன் அவர்கள் விவாதித்தனர். இக்குழு இந்தியாவிற்கு அரசியலமைப்புச் சட்டம் தயாரிப்பதற்கு தேவையான அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபைக்கு அங்கீகாரம் அளித்தது. இந்தியாவின் எதிர்கால அரசியல் முறையைக் குறித்த முக்கியமான திட்டம் காபினட் மிஷன் என்ற பெயரில் அறியப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் வளர்ச்சிப் படிகளைக் குறிக்கும் சுவர் மலர் தயார்செய்யவும்.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

#### முகவுரை

இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை ஓர் [1][**இறையாண்மை, சமதர்ம, மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக]** நிறுவ அந்த நாட்டு மக்களுக்கு:

சமூக, பொருளாதார அரசியல் நீதியையும்;

சிந்தனைக் கருத்து வெளியீடு, நம்பிக்கை, சமய வழிபாடு போன்றவைகளுக்கான **சுதந்திரம்:**

பதவியிலும், வாய்ப்பிலும் சமத்துவம் அடைதற்கும்;

அவர்களுக்கிடையில்

தனிநபர் கண்ணியத்தையும் [2][தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டையும்] உறுதிப்படுத்த அனைவரிடத்திலும் சகோதரத்துவத்தை ஊக்குவித்திட;

உள்ளார்ந்த உறுதியுடையவராய்;

நம்முடைய அரசியலமைப்பு உருவாக்க சபையும் இந்த 1949 நவம்பர் 26 ஆம் நாள் நமது அரசியலமைப்பு உருவாக்க சபை தயாரித்த அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்று சட்டமாக்கி நமக்குத் தருகின்றது.

---

1. 1976 - அரசியலமைப்புச் சட்டம் (42 –வது சட்டதிருத்தம்) சட்டம் 2-ஆம் பிரிவுப்படி "இறையாண்மை ஜனநாயக குடியரசு" என்பதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது (3.1.1977 முதல் அமுலுக்கு வந்தது).
2. மேல் கூறப்பட்ட சட்டம் 2-ஆம் பிரிவுப்படி "நாட்டின் ஒருமைப்பாடு" என்பதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது (3.1.1977 முதல் அமுலுக்கு வந்தது).

அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகவுரையைச் சோதனை செய்யவும். அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியமான கருத்துகளும், விழுமியங்களும், கண்ணோட்டங்களும் அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ளன. சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்திய மக்கள் விரும்பிய, கனவு கண்ட கருத்துகளை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டும் படிவமே நமது அரசியலமைப்புச் சட்டம். நாட்டின் அதிகாரம் மக்களிடமிருந்து தோன்றுகிறது என்று அரசியலமைப்புச் சட்டம் விவரிக்கின்றது. நாட்டின் பண்பு, அரசியல் அமைப்பு, சட்டத்தின் நோக்கங்கள், அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட நாள் போன்றவைகளும் முகவுரையில் இடம்பெற்றுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ள நோக்கங்கள் எவை என அறிந்துகொள்வோம்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ள அடிப்படை நோக்கங்கள்**

**இறையாண்மை**

வெளிநாட்டவரின் தலையிடலுக்கோ, அழுத்தங்களுக்கோ ஆளாகாமல் தீர்மானங்கள் எடுப்பதற்கான நாட்டின் அதிகாரம்

**சமத்துவம்**

அனைவருக்கும் சமமான பதவிகளும் வாய்ப்புகளில் சமத்துவமும் உறுதி செய்வதன் வாயிலாக சமூக நீதியை நிலைநிறுத்துகிறது

**மதச்சார்பின்மை**

நாட்டிற்கு அதிகாரப்பூர்வமான மதம் கிடையாது. தனிநபருக்கு விருப்பமுள்ள மதத்தில் நம்பிக்கைவைப்பதற்கும், பின்பற்றுவதற்கும் எடுத்துரைப்பதற்கும் உரிமை உண்டு. நாடு எந்த ஒரு மதத்திடமும் வேற்றுமை காட்டுவது இல்லை.

**ஜனநாயகம்**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்கின்றனர். இதன் வழியாக மக்கள் இறையாண்மையுடையவர்களாக மாறுகிறார்கள்.

**குடியரசு**

தேர்தல் மூலம் நாட்டின் தலைவரைத் தீர்மானிக்கும் முறையே குடியரசு. இந்திய நாட்டின் தலைவரான குடியரசுத் தலைவர் (President) தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபராக இருக்க வேண்டுமென்று நமது அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்றது.

நாடு குடிமக்களுக்கு உறுதியளிக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் என்பவைகளைக் குறித்து முகவுரையில் கூறப்பட்டுள்ளது. மட்டுமன்றி தனிநபரின் மரியாதை, நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு போன்றவற்றை உறுதிசெய்து மக்களிடையே சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவது முகவுரையின் நோக்கமாகும்.

கீழே தரப்பட்டுள்ள சிறப்புப் பண்புகள் அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ள எந்தெந்த நோக்கத்தை வெளிப்படுத்துகிறது?

| சிறப்புகள் | நோக்கங்கள் |
|---|---|
| நாட்டிற்கு அதிகாரப் பூர்வமான மதம் கிடையாது | |
| மக்கள் இறையாண்மையுடையவர்கள் | |
| தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர் நாட்டின் தலைவர் | |
| வெளிநாட்டவரின் தலையீடுகள் இல்லாமல் தீர்மானம் எடுப்பதற்கான நாட்டின் அதிகாரம் | |
| சமத்துவமின்மையைக் குறைத்து சமூக நீதியை உறுதிசெய்கின்றது. | |

மனித சமூகத்தின் வளர்ச்சி வரலாற்றை சோதனை செய்தால் அரசியலமைப்புச் சட்டம் என்பது நவீன சமூகத்தின் படைப்பு என்று கருதப்படுகிறது. தற்கால நாடுகளின் நிலைநிற்றலுக்கும், இயல்பாகச் செயல்படுவதற்கும், முன்னேற்றத்திற்கும், நிலையான அரசியலமைப்புச் சட்டம் இன்றியமையாதது. நாடு உருவாக்கத்திற்கு உதவுகின்ற அடிப்படைச் சட்டங்களை வழங்குவதே அரசியலமைப்புச் சட்டத்தின் பணி. அரசியலமைப்புச் சட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படும்பொழுதே நாட்டின் கனவுகளும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படும். அரசியல் அமைப்புச் சட்டத்தைப் போன்று முக்கியமானதே அரசியல் அமைப்பு முகவுரையும். முகவுரை அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கங்களைக் கூறுகின்றது. இந்திய மக்களின் உறுதிப்பாடு நமது அரசியலமைப்பின் ஆன்மாவான முகவுரையில் நிறைந்துள்ளது. நமது அரசியலமைப்புச்சட்டம் உருவாக்கிப் பல ஆண்டுகள் கடந்தபின்னரும் அதே ஆற்றலோடும் கருத்தோடும் இன்றும் நிலைநிற்கின்றது. இதை இந்திய அரசியலமைப்பின் ஒரு முக்கியப் பண்பாக மதிப்பிடலாம்.

## தொடர் செயல்பாடுகள்

- இந்திய அரசியலைப்புச் சட்டத்தின் உருவாக்கம்: வளர்ச்சிப்படிகள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு டிஜிட்டல் பிரசன்டேஷன் தயாரித்துக் காண்பிக்கவும்.
- சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் அரசியலமைப்புச் சட்டத்தைக் குறித்து மேலும் அறிந்துகொள்ள வழக்கறிஞருடன் ஒரு நேர்காணல் நடத்தவும். வீடியோ கான்பரன்ஸ் வாய்ப்பையும் பயன்படுத்தலாம்.
- அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையை விளக்குகின்ற முத்திரை வாக்கியங்கள் அடங்கிய விளம்பரப் பலகை தயாரித்து அரசியலமைப்பு தினத்தில் பள்ளியில் ஓர் ஊர்வலம் (பேரணி) நடத்தவும்.



10

# பெருங்கடல்கள் வழியாக

"வயலையும் ஆறையும் கடந்து செல்வோம்
கடல்களையும் கடந்து போகலாம்
பழைய காலத்தில் கொலம்பஸ் போனதைப் போன்று
புதிய உலகத்தைத் தேடிப்போகலாம்; நாம்
புதிய இடங்களைத் தேடிச் செல்வோம்"

என்பதே என்.வி. கிருஷ்ணவாரியர் எழுதின
வெள்ளப் பொக்கம் என்ற பாடலின் பொருளாகும்.

கொலம்பஸ்ஸைப் போன்று சாதனைப் பயணம் நடத்தின மாலுமிகளைக் குறித்து நீங்கள் கேட்டிருப்பீர்கள் அல்லவா? புதிய நிலப்பகுதியைத் தேடி பெருங்கடல் வழியாக அவர்கள் நடத்திய கடல் பயணங்கள் வரலாற்றில் இடம் பிடித்துள்ளன. பெருங்கடல்களைக் குறித்து அறிந்து கொள்ள நாமும் ஒரு பயணம் செல்வோமா?

புவியில் உயிரை நிலைநிறுத்தும் முக்கியமான காரணிகளுள் ஒன்றே நீர். புவிமேற்பரப்பின் 71 சதவீதமும் நீராகும். பெருங்கடல்கள், காயல்கள், ஏரிகள், நதிகள், அருவிகள், நீரூற்றுகள், நீர்நிலைகள், கிணறுகள் போன்றவை நீரின் பல்வேறு ஆதாரங்களாகும் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? இவற்றில் புவிமேற்பரப்பு நீர்நிலைகளும், நிலத்தடி நீர்நிலைகளும் உட்படும். மேற்பரப்பு நீர்நிலைகள் புவிமேற்பரப்பில் காணப்படும்பொழுது நிலத்தடி நீர்நிலைகள் மேற்பரப்போடு சேர்ந்துள்ள புவியின் உட்பகுதியில் காணப்படும்.

தரப்பட்டுள்ள படங்களைக் கவனித்து கருத்துப் படத்தைப் பூர்த்தி செய்யவும்..



கிணறு



ஏரி



நீரூற்று



குழாய்க்கிணறு



நதி



பெருங்கடல்

நீர் ஆதாரங்கள்

- மேற்பரப்பு நீர் ஆதாரங்கள்
  - நதி
  - ..............................
  - ..............................
- நிலத்தடி நீர் ஆதாரங்கள்
  - நீரூற்று
  - ..............................
  - ..............................

தினசரி தேவைகளுக்கான நீர் எந்தெந்த நீர் ஆதாரங்களிலிருந்து நமக்கு கிடைக்கின்றது?

- நீரூற்று
-
-
-

புவியின் நீரை உயிரினங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்திய பின்னரும் நீர் தீர்ந்து போகவில்லை எதனால்?

நீர்மண்டலத்திலுள்ள நீர்ச் சுழற்சியின் விளைவாக நீர் ஆதாரங்களிலுள்ள நீர் தீர்ந்து போவதில்லை.

**நீர்மண்டலம்**

திடம், திரவம், வாயு என்னும் நிலைகளில் புவியின் மேற்பரப்பிலும் உட்பகுதியிலும் வாயு மண்டலத்திலும் காணப்படும் மொத்த நீரே நீர்மண்டலமாகும்.

## நீர்ச் சுழற்சி

புவியின் உள்ளேயும் புவிமேற்பரப்பிலும், வளிமண்டலத்திலுமாக ஏற்படும் நீரின் சுழற்சியே நீர்ச் சுழற்சியாகும். இச்சுழற்சி எவ்வாறு ஏற்படுகின்றது என்று சோதனை செய்வோம்.




படம் 10.1 நீர்ச் சுழற்சி

படத்தைக் கவனித்தீர்களல்லவா?

புவி மேற்பரப்பில் பல்வேறு நீர் ஆதாரங்களில் உள்ள நீர் சூடாகி நீராவியாக மாறுகின்றது. இவ்வாறு வாயு மண்டலத்தில் வந்து சேரும் நீராவி குளிர்ந்து மேகங்கள் உருவாகின்றன. மேகங்கள் மட்டுமல்லாது மூடுபனி, உறைபனி போன்றவையும் குளிரடைதலின் பிற வடிவங்களாகும். மேகங்களில் உள்ள நீர்த்துளிகள் புவியில் விழும் செயல் பொழிதல் எனப்படும். மழை, பனிப் பொழிவு, ஆலங்கட்டி விழுதல் போன்றவை பொழிதலின் பல்வேறு வடிவங்களாகும்.

**நீராவியாதல் (Evaporation)**

ஒரு திரவம் வெப்பத்தின் உதவியுடன் வாயுநிலைக்கு மாறும் செயல்.

**குளிரடைதல் (Condensation)**

வாயுவிலுள்ள நீராவி குளிர்ந்து நீராக மாறும் செயல்.

**பொழிதல் (Precipitation)**

தொடர்ச்சியாக குளிரடைதலின் காரணமாக மேகங்களிலுள்ள நீர்த்துளிகளின் அளவும் கனமும் அதிகரிப்பதனால் வாயு மண்டலத்தில் தங்கி நிற்க இயலாமல் அவை திரவ வடிவிலோ திடவடிவிலோ புவியில் விழும் செயல்.

இவ்வாறு நீர்மண்டலத்திலுள்ள நீர் நீராவியாதல், குளிரடைதல், பொழிதல் என்னும் செயல்கள் மூலம் சுழன்று கொண்டிருப்பதே நீர் சுழற்சி.

நீர் உயிரினங்களின் நிலைபேற்றிற்கு இன்றியமையாத காரணியாகும். ஆனால் புவியின் எல்லா இடங்களிலும் நீர் ஒரே போல் பரவியுள்ளதா?

தரப்பட்டுள்ள படத்திலிருந்து நீரின் பரவலைக் கவனிக்கவும்.




படம் 10.2

புவியில் காணப்படும் நீரின் 97 சதவீதமும் உப்பு நீராகும் என்று நீங்கள் அறிந்துகொண்டீர்களல்லவா? புவியிலுள்ள மொத்த சுத்த நீரின் அளவு 3 சதவீதம் ஆகும். அதில் பெரும்பகுதியும் பனிக்கட்டியாகவும் பனியாறாகவும் உறைந்து காணப்படுகின்றது. உயிரினங்களுக்குப் பயன்படும் சுத்த நீரின் அளவு மிகமிகக் குறைவாகும்.

சுத்தநீரைப் போன்றே புவியில் மனிதனின் நிலைப்பேற்றிற்கு கடல்நீரும் இன்றியமையாதது. காலநிலையைக் கட்டுபடுத்துவதிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மனிதர்களுக்குத் தேவையான வளங்களைத் தருவதிலும் பெருங்கடல்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

## பெருங்கடல்கள்

உலகப் பெருங்கடல்கள் தினத்தை ஒட்டி மாணவர்கள் தயாரித்த பலகைகளைக் கவனிக்கவும்..




புவியில் உயிரிகளின் நிலைபேற்றிற்கு பெருங்கடல்களின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெருங்கடல்களின் பிற சிறப்புக்களை அறிந்து கொள்வோம்.

கண்டங்களுக்கு இடையே நிலை கொள்ளும் பெரும் நீர்பரப்புகளே பெருங்கடல்கள். கடல்கள், விரிகுடாக்கள் போன்றவை பெருங்கடல்களின் பகுதிகளாகும். பெருங்கடல்களைக் குறித்துக் கற்கின்ற அறிவியல் பிரிவு பெருங்கடல் அறிவியல் (Oceanography) என்று அழைக்கப்படுகிறது. பெருங்கடல்களின் சிக்கலான அசைவுகளைக் குறித்து அறிந்துகொள்வதற்கு பெருங்கடல் அறிவியல் உதவுகிறது. மேலும் காலநிலை மாற்றம், பெருங்கடல் மாசடைதல், பல்லுயிர் இழப்பு போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு கடல் அறிவியல் உதவுகிறது.

**ஜூன் 8 உலகக் கடல் தினம்**

எல்லா ஆண்டும் ஜூன் 8 உலக கடல்தினமாக அனுசரிக்கப்படுகிறது. பெருங்கடல்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதே இதன் நோக்கம். மனிதனின் அறிவீனமான செயல் பெருங்கடல்களின் சுற்றுச்சூழலை எதிர்மறையாகப் பாதிக்கின்றது. அதனால் பெருங்கடல்களைப் பாதுகாக்க வேண்டியதன் தேவையை நினைவூட்டுவதாக கடல் தினம் கொண்டாடப்படுகிறது.

**கடல்:** ஓரளவு கரைப்பகுதியால் சூழ்ந்து காணப்படும் பெருங்கடலின் பகுதியாகும் கடல். எ.கா. அரபிக்கடல்

**விரிகுடா:** கரைப்பகுதியின் உள்ளே உந்திக் காணப்படும் பெருங்கடலின் பகுதியே விரிகுடா. எ.கா: வங்காளவிரிகுடா

**கடலிடுக்கு:** இரு கடல்களையோ பெருங்கடல் களையோ இணைக்கின்றதும், இரு கரை பகுதிகளுக்கு இடையே நிலை கொள்கின்ற பெருங்கடலின் குறுகிய பகுதியே கடலிடுக்கு எனப்படும். எ.கா. பாக் கடலிடுக்கு




உலக நிலப்படத்தைக் கவனித்து பெருங்கடல்களை அட்டவணைப்படுத்தவும்.




நிலப்படம் 10.1

- பசிபிக் பெருங்கடல்
- 
- 
- 
- 

**இந்தியப் பெண்மணிகள் ஐ.என்.எஸ்.வி. தரணியில் போயின்ட் நிமோ கடந்தார்கள்.**

டெல்லி: நாவிக ஸாகர் சுழற்சி II இன் பகுதியாக கடல் வழி உலகப்பயணம் நடத்திய இந்திய கடற்படைத் துணைத் தளபதி தில்னா.கெ, ரூபா.எ போன்றோர் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் 'பாயின்ட் நிமோ'வைக் கடந்தனர்.

செய்தியைக் கவனித்தீர்களல்லவா?

'பாயின்ட் நிமோ' (Point Nemo) என்னும் பெருங்கடல் பகுதியைக் குறித்து கேள்வி பட்டுள்ளீர்களா?

இது கரைப்பகுதியிலிருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ள பெருங்கடல் பகுதியாகும். இந்த மையத்தின் அருகில் அமைந்துள்ள கரைப்பகுதியை அடைவதற்கு சுமார் 2000 கிலோ மீட்டருக்கு மேல் பயணம் செய்யவேண்டும். பாயின்ட் நிமோ பசுபிக் பெருங்கடலிலுள்ளது..

## பசிபிக் பெருங்கடல்

மிகப்பெரியதும் ஆழம் கூடிய பெருங்கடலாகும் பசிபிக் பெருங்கடல். புவிமேற்பரப்பின் $^1/_3$ பங்கை இப்பெருங்கடல் உள்ளடக்கியது.




நிலப்படம் 10.2

**பசிபிக்**

உலகப்பயணியான பெர்டினன்று மெக்கல்லன் இப்பெருங்கடலுக்கு இப்பெயரைச் சூட்டினார். இப்பெருங்கடலை அவர் 'மார் பசபிகோ' என்று அழைத்தார். இச்சொல்லுக்கு 'அமைதி' என்று பொருள். அட்லாண்டிக் பெருங்கடலைவிட இப்பெருங்கடல் அமைதியாக உள்ளது என்று கருதி அவர் இப்பெயர் அளித்தார்.

படத்தைக் கவனித்து பசிபிக் பெருங்கடலுடன் சேர்ந்து காணப்படும் கண்டங்களைக் கண்டுபிடிக்கவும்.

இப்பெருங்கடலில்தான் பெரும் அளவு தீவுகள் காணப்படுகின்றன. பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஹவாய், நியூசிலாந்து போன்றவை பசுபிக் பெருங்கடலில் காணப்படும் சில முக்கிய தீவுக் கூட்டங்கள் ஆகும். பசுபிக் பெருங்கடலின் பகுதியான மரியான அகழியிலுள்ள சலஞ்சர் பள்ளமே

உலகின் மிகவும் ஆழம் கூடிய பகுதி. ஏராளம் பள்ளங்களும் உயிருள்ள எரிமலைகளும் இப்பெருங்கடலின் சிறப்பியல்புகளாகும்.

பசிபிக் பெருங்கடலுடன் தொடர்புடைய அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| முக்கியமான தீவுகள் | மிகப்பெரிய பள்ளம் | எல்லையைப் பங்கிடும் கண்டங்கள் |
|---|---|---|
| | | |

## அட்லாண்டிக் பெருங்கடல்

**'டைட்டான்' நீர்மூழ்கிக்கப்பல் உடைந்து மூழ்கியது**

வாஷிங்டன் : தாய் பாய்மரக்கப்பலான போலார் பிரின்ஸ் கப்பலுடன் உள்ள தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெருங்கடல் பாய்மரக்கப்பலான டைட்டான் உடைந்தது. 1912-ஆம் ஆண்டு அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கிப்போன டைட்டானிக் என்ற ஆடம்பரக் கப்பலின் எஞ்சிய பொருட்களைக் காணக் கடலின் அடிப்பகுதிக்குச் சென்ற ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குழு ஆபத்திற்குள்ளானது.

செய்தியில் கூறப்பட்டுள்ள அட்லாண்டிக் பெருங்கடலின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்வோம்.

அளவில் இரண்டாவது பெரிய பெருங்கடல் அட்லாண்டிக் பெருங்கடல் ஆகும். இது ஆங்கில எழுத்துகளில் 'S' இன் வடிவத்தைப் பெற்றுள்ளது. உலகிலே அதிக கப்பல் போக்குவரத்து அட்லாண்டிக் பெருங்கடலில்தான் நடைபெறுகிறது.

இப்பெருங்கடலில் தோராயமாக மத்தியப் பகுதியில் நிலைகொள்ளும் பெருங்கடலின் உட்பகுதியில் உள்ள மத்திய அட்லாண்டிக் மலைத்தொடர் இதன் பிறிதொரு சிறப்பாகும். பியூரிட்டோ ரிக்கோ பள்ளத்தில் மில்வோகிதீவு இப்பெருங்கடலில் மிகவும் ஆழம் கூடிய பகுதியாகும். நியூஃபௌண்ட்லாந்து ஐஸ்லாந்து போன்றவை அட்லாண்டிக் பெருங்கடலின் சில முக்கியமான தீவுகளாகும்.




நிலப்படம் 10.3

நிலப்படத் தொகுப்பு, புவி உருண்டை போன்றவற்றின் உதவியுடன் அட்லாண்டிக் பெருங்கடலுடன் சேர்ந்து காணப்படும் கண்டங்களைக் கண்டுபிடிக்கவும்.

குறிப்புகளின் அடிப்படையில் அட்லாண்டிக் பெருங்கடலின் அடையாள அட்டையைத் தயாரிக்கவும்.

பெயர் :

பொது எல்லைகள் :

முக்கிய தீவுகள் :

மிகவும் ஆழம் உள்ள பள்ளம் :

முன்னேற்றப் பாதையில் விழிஞ்ஞம் சர்வதேசத் துறைமுகம்.

புதிய வரலாறு படைத்தது விழிஞ்ஞம் துறைமுகம்

விழிஞ்ஞம் இந்தியாவின் புதிய நுழை வாசல்

தலைப்புச் செய்திகளைப் பார்த்தீர்களல்லவா? எந்தக் கடற்கரையில் இந்தத் துறைமுகம் அமைந்துள்ளது?

•

## இந்தியப் பெருங்கடல்

ஒரு நாட்டின் பெயரில் அறியப்படும் ஒரே ஒரு பெருங்கடலாகும் இந்தியப் பெருங்கடல். இது அளவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியப் பெருங்கடலுடன் சேர்ந்து காணப்படும் கண்டங்களைக் கண்டுபிடிக்கவும்.




நிலப்படம் 10.4

வங்காள விரிகுடா, அரபிக்கடல் போன்றவை இந்தியப் பெருங்கடலின் பகுதியாகும். இப்பெருங்கடலில் ஆழம் கூடிய பகுதி ஜாவாபள்ளமாகும். அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு, மாலத்தீவு, ஸ்ரீலங்கா போன்றவை இப்பெருங்கடலில் அமைந்துள்ள முக்கிய தீவுகளாகும். மலாக்கா கடலிடுக்கு இந்தியப் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கிறது.

புவி உருண்டை, நிலப்படத்தொகுப்பு போன்றவைகளைக் கவனித்து இந்தியப் பெருங்கடலுடன் எல்லையைப் பங்கிடும் நாடுகளையும் பெருங்கடலில் உள்ள முக்கிய தீவுகளையும் கண்டு பிடிக்கவும்.

## தென்பெருங்கடல்

புவி உருண்டை, நிலப்படத்தொகுப்பு போன்றவைகளைக் கவனித்து அண்டார்டிக்கா கண்டத்தைச் சுற்றியுள்ள பெருங்கடலைக் கண்டறியவும்.




நிலப்படம் 10.5

அண்டார்டிக்காவைச் சுற்றிலும் தோராயமாக $60^0$ தென் அட்சக்கோடுவரை தென்பெருங்கடல் பரந்து காணப்படுகிறது. ஆர்ட்டிக் தவிர பிறப் பெருங்கடல்களுடன் எல்லையைப் பங்கிடும் இப்பெருங்கடல் அளவில் நான்காவது இடத்தைப் பெறுகின்றது. டோல்மான் ஹெட் போன்றவை இப்பெருங்கடலில் உள்ள சில தீவுகளாகும். இப்பெருங்கடலின் தென் ஸ்டாண்ட்விச் பள்ளத்தின் ஆழம் மிகுந்த பகுதியே பாக்டோரியன் அகழியாகும்.

## ஆர்ட்டிக் பெருங்கடல்

ஆர்ட்டிக் பெருங்கடலின் பெரும்பகுதியும் ஆர்ட்டிக் வட்டத்திற்குள் அமைந்துள்ளது. ஆர்ட்டிக் பெருங்கடலில்தான் வடதுருவம் அமைந்துள்ளது. இப்பெருங்கடல் மிகவும் சிறியதும் ஆழம் குறைந்ததுமாகும். வருடத்தின் பெரும் பகுதியும் இப்பகுதியில் பனி உறைந்து காணப்படும். மொல்லோய் பள்ளமே இப்பெருங்கடலின் மிகவும் ஆழம் கூடியப் பகுதி. ஆர்ட்டிக் பெருங்கடல் ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்க, போன்ற கண்டங்களின் வட எல்லையாகும்.

பெருங்கடலுடன் தொடர்புடைய பணித்தாளை நிறைவு செய்யவும்.

| பெருங்கடல்கள் | அளவு | ஆழம் கூடிய பகுதி | முக்கிய தீவுகள் |
|---|---|---|---|
| தென்பெருங்கடல் | | | |
| ஆர்ட்டிக் பெருங்கடல் | | | X |
| பசிபிக் பெருங்கடல் | | | |
| அட்லாண்டிக் பெருங்கடல் | | | |
| இந்தியப் பெருங்கடல் | | | |

## பெருங்கடல் நீரும் அசைவுகளும்




இடுக்கி மாவட்டத்திலிருந்து முதன் முதலில் கடல் காண்பதற்கு கல்விச் சுற்றுலா சென்ற தியாவின் அனுபவக் குறிப்பை வாசித்தீர்களல்லவா?

நீங்கள் கடலலைகளைப் பார்த்ததுண்டா?

கடலலைகள் என்றால் என்ன?

பெருங்கடல் மேற்பரப்பில் காற்று ஏற்படுத்தும் அசைவே கடலலைகள். காற்று உருவாக்கும் ஆற்றல் ஓட்டம் கடல் மேற்பரப்பில் உயர்வு தாழ்வுகளைத் தோற்றுவிக்கிறது. நீர்ப்பரப்பைக் காற்று தொட்டு வீசும் பொழுது சாதாரணமாக கடலலைகள் உருவாகின்றன. பெருங்கடல் நீரின் தொடர்ச்சியான உயர்வு தாழ்வுகளே கடல் அலைகள். காற்றின் வேகம் கூடுவதற்கு ஏற்ப அலைகளின் அளவு பெரிதாகின்றது.

கடல் அலைகள் மட்டுமல்ல கடல் ஏற்ற இறக்கங்கள் கடல் நீரோட்டங்களும் பெருங்கடல் நீர் அசைவுகளில் உட்படும். அவைகளைக் குறித்து விரிவாகக் காண்போம்.

குறிப்பிட்ட இடைவெளிகளுக்கு இடையே கடல்நீருக்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளே கடல் ஏற்ற இறக்கங்கள். கடல்நீருக்கு ஏற்படும் உயர்வை வேலியேற்றம் என்றும் தாழ்வை வேலியிறக்கம் என்றும் கூறுவர்.

பெருங்கடல்களினூடாக நதிகள் ஒழுகுவதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். கடல்நீர் நதிகளைப் போன்று பல கிலோமீட்டர் தூரத்திற்கு கடலுக்குள் ஒழுகிச் செல்கிறது. இவ்வாறு கடல் நீர் குறிப்பிட்ட திசையில் குறிப்பிட்ட பாதை வழியாக ஒழுகும் நிகழ்வே கடல்நீரோட்டம். அனைத்துப் பெருங்கடல்களிலும் இதுபோன்ற கடல் நீரோட்டங்கள் உண்டு

### வேலியேற்றம் வேலியிறக்கம்

சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசை மற்றும் மையவிலகுவிசை போன்றவைகளின் விளைவாக கடல்நீர் உயர்வதும் தாழ்வதும் செய்வதே வேலி ஏற்றம் வேலி இறக்கம் எனப்படும். புவி, சந்திரனுக்கு நேர்முகமாக வரும் பகுதியில் ஈர்ப்புவிசையின் காரணமாகவும் எதிர் பக்கத்தில் மையவிலகு விசையின் காரணமாகவும் ஒரே நேரத்தில் கடலில் வேலியேற்றங்கள் உண்டாகின்றன. இதே வேளையில் பெருங்கடலின் பிறபகுதிகளில் வேலியிறக்கமும் ஏற்படுகின்றது.

### கடல்நீரோட்டங்கள்

பெருங்கடல்களில் குறிப்பிட்ட பாதை வழியாக கடல் நீர் தொடர்ச்சியாக ஒழுகும் நிகழ்வே கடல் நீரோட்டங்கள். காற்று, கடல் நீருக்கு ஏற்படும் வெப்ப வேறுபாடுகள், உவர்ப்புத் தன்மையில் உள்ள வேறுபாடுகள், புவிச்சுழற்சி போன்றவை கடல் நீரோட்டங்களுக்கான சில காரணங்களாகும்.

கருத்து விளக்கப்படத்தை நிறைவு செய்யவும்.

**கடல்நீரின் அசைவுகள்**

- ........................ காற்று கடல் மேற்பரப்பில் ஏற்படுத்தும் அசைவு
- வேலியேற்றம், வேலியிறக்கம் ........................ ........................
- ........................ ........................ ........................

தியா கடல்நீரை ருசித்த அனுபவக்குறிப்பை வாசித்தீர்களல்லவா ?

கடல்நீருக்கு ஏன் உவர்ப்புத் தன்மை உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா?

அனைத்து நீர் ஆதாரங்களிலிருந்தும் கிடைக்கின்ற நீரிலும் தாது உப்புகள் கலந்துள்ளன. ஆனால் கடல் நீரில் உப்பின் அளவு அதிகமாகும். எனவே கடல் நீருக்கு உவர்ப்புத்தன்மை உள்ளது. கடல் நீரில் கலந்துள்ள அனைத்துத் தாதுப்புகளின் மொத்த தொகையே உவர்ப்புத்தன்மை.

## பெருங்கடலும் மனிதனும்

பெருங்கடல்கள் அரிதான வளங்களின் ஆதாரமாகும். கடல் நம் வாழ்வில் தாக்கம் செலுத்துவது எவ்வாறு? படத்தைக் கவனித்து அட்டவணைப்படுத்தவும்.




- காலநிலையைக் கட்டுபடுத்துகிறது
-
-
-

பழங்காலம் முதலே வாழ்வாதாரத்திற்காக மனிதர் கடலைச் சார்ந்துள்ளனர். மீன்வளத்துடன் விலைமதிப்பற்ற பிற வளங்களையும் கடல் வழங்குகிறது. கடல்வழிப் போக்குவரத்தினூடாக நாடுகளுக்கு இடையே வாணிப உறவுகளை நிலைநிறுத்துவதற்கு கடல் போக்குவரத்துகள் உதவுகின்றன. உலக வெப்பமடைதலைக் கட்டுப்படுத்துவதிலும் ஆக்சிஜன் உற்பத்தி செய்வதிலும் கடலின் பங்கு பெரியதாகும். கடற்கரைகள் பொதுவாக சுற்றுலா மையங்களாகும்.

## கடல் நீர் மாசடைதல்


படம் 10.3


படம் 10.4



படம் 10.5



படம் 10.6

படங்களைக் கவனித்தீர்களல்லவா?

இவ்வகை, காட்சிகள் உங்களுக்குத் தெரியுமா?

கடல்கள் பலவகையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. மாசடைதலே கடல்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை. வேதியல் பொருட்களும் ஆபத்தான பொருட்களும் பெருங்கடலில் வந்து சேர்வதால் பெருங்கடல்களின் சுற்றுச்சூழலுக்கு கெடுதலாகும். பெருங்கடல்கள் மட்டுமல்ல நதிகள், ஏரிகள் போன்ற சுத்த நீர் ஆதாரங்களும் மாசடைகின்றன.

## கடல்நீர் பாதுகாப்பு முறைகள்

பெருங்கடல் நீரைப் பாதுகாக்கும் முறைகள் எவை எனக் காண்போம்.

- நெகிழி, வேதியல் பொருட்கள் போன்றவை கடலில் வந்து சேர்வதைத் தடுக்கவும்.
- கடலோரங்களை மாசற்றவைகளாகப் பாதுகாக்கவும்.
- பெருங்கடல்களைப் பாதுகாப்பதைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும்.
- அதிகப்படியான மீன்பிடிப்பு முறையைக் கட்டுப்படுத்தவும்.
- பெருங்கடல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும்.
- 

பெருங்கடல் நீரைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் முத்திரைப் பாடல்களைத் தயாரியுங்கள்.

நாம் பெருங்கடல்களையும் அதன் சிறப்புப் பண்புகளையும் குறித்து அறிந்து கொண்டோமல்லவா? நுண்ணுயிரிகள் முதல் நீலத்திமிங்கலம் வரையுள்ள பல்வேறு உயிரினங்களும் பல்வகை தாவரங்களும் அடங்கிய பெருங்கடல்களின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியது மிகத்தேவையாகும். நீரை வீணாக்குதலும் மாசடையச் செய்தலும் புவியில் உயிரினங்களின் நிலைபேற்றிற்கே அச்சுறுத்தலாகிவிட்டது. எனவே நீர் பாதுகாப்பிற்காக நாம் ஒன்றிணைவோம். புவி என்றும் நீர்கிரகமாக நிலைகொள்ளட்டும்.

## தொடர் செயல்பாடுகள்

- பெருங்கடல்களையும் அவைகளின் பண்புகளையும் குறித்து மேலும் தகவல்களைத் திரட்டி டிஜிட்டல் பிரசன்டேசன் தயாரிக்கவும்
- நீர் மாசடைதலுடன் தொடர்புள்ள செய்திகள், படங்கள் போன்றவைகளைத் திரட்டி டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.
- சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் பெருங்கடல் தினத்தை ஒட்டி 'பெருங்கடலும் மனிதனும்' என்ற தலைப்பில் ஒரு பேச்சுப்போட்டி நடத்தவும்.




# 11

# சேமிப்போம்... பாதுகாப்போம்...




படம் 11.1




படம் 11.2

ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடந்த உரையாடலைக் கவனித்தீர்கள் அல்லவா? அவர்கள் எதைப் பற்றி உரையாடினார்கள்?

- 

உங்கள் அனைவருக்கும் வங்கிக்கணக்கு உள்ளதா? வங்கியைப் பற்றியும் வங்கிக் கணக்குகளைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்வோம்.

வங்கி என்றால் என்ன?

பொதுமக்களிடம் இருந்து பணத்தை வைப்புத்தொகையாகப் பெற்றுத் தேவைப்படுவோருக்கு வங்கி விதிமுறைகளைப் பின்பற்றி கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் வங்கிகள் எனப்படுகின்றன.

இன்றைய வங்கிகள் எவ்வாறு தோன்றின என்பதை நாம் ஆய்வு செய்வோம்.

## வங்கிகளின் தோற்றம்

உள்ளூரில் பணம் கடன் வழங்கும் நபர்கள் (Local money lenders) தங்களிடம் உள்ள உபரிப் பணத்தை தேவைப்படுபவர்களுக்குக் கடனாகக் கொடுக்கத் தொடங்கியதுதான் வங்கிகளின் தோற்றத்திற்கு காரணமானது. கடன் தேவைப்படுபவர்களின் எண்ணிக்கை கூடுதலானபோது பணப் பரிமாற்றம் நடத்தியவர்கள் கூடுதலான பணத்திற்கான வழியை கண்டுபிடிக்கத் தொடங்கினர். இதற்காக அவர்கள் சேமிப்புகளை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது பணப் பரிமாற்ற நிறுவனங்கள் உருவாக வழிவகுத்தது. கடனைத் திரும்பச் செலுத்தும் திறன், நம்பிக்கை என்னும் விதிமுறைகளின் அடிப்படையில் இந்நிறுவனங்கள் தேவை உள்ளவர்களுக்கு பணத்தைக் கடனாக வழங்கியது. வைப்புத் தொகை ஏற்றுக்கொள்வதும் கடன் வழங்குவதும் படிப்படியாக அதிகரித்தபோது தனிநபர்களுக்கு இச்செயல்பாடுகளை நிர்வகிக்க இயலாத நிலை உருவானது. இது வங்கி உட்பட்ட நிதி நிறுவனங்களுடைய தோற்றத்திற்கு வழிவகுத்தது.

### பணம் என்றால் என்ன?

பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்திற்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படும் எதையும் பொதுவாக பணம் என்று கூறலாம். பணம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மதிப்பை உறுதிசெய்து, அவற்றின் பரிமாற்றத்தை எளிதாக்க உதவுகிறது.





### வங்கி

இத்தாலிய மொழியில் 'பாங்கா' (Banca), பிரெஞ்சு மொழியில் 'பாங்கு' (Banque) என்ற சொற்களிலிருந்து ஆங்கில மொழியில் 'பாங்க்' (Bank) என்ற சொல் உருவானது. இரண்டு சொற்களின் அர்த்தம் 'பன்ஞ்' என்பதாகும். பழங்காலத்தில் இத்தாலிய தெருக்களில் தங்கம் மற்றும் வெள்ளியை ஈடாக பெற்றுக்கொண்டு வணிகர்கள் பணத்தைக் கடனாகக் கொடுத்தனர். நாணயங்கள் குவித்து வைக்கப்பட்ட பெஞ்சுகளிலிருந்து அவர்கள் பணப்பரிமாற்றம் செய்தனர்.

உள்ளூர் பணப்பரிமாற்ற நிறுவனங்கள் வங்கிகளாக பரிணமித்தபோது பொருளாதாரச் செயல்பாடுகளில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பதைப் பார்ப்போம்.

- மேலும் பலருக்கு கடன் கிடைக்கத் தொடங்கியது
- சுரண்டலின் அளவு குறைந்தது
- மக்களிடையே சேமிக்கும் பழக்கம் அதிகமானது

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் வருகையோடு இந்தியாவில் ஒரு புதிய வங்கிமுறை தொடங்கியது. இந்தியாவின் முதல் வங்கி 1770-இல் நிறுவப்பட்ட பாங்க் ஆப் இந்துஸ்தான் ஆகும். கேரளாவின் முதல் வங்கி 1899-இல் கோழிகோட்டை தலைமையிடமாக கொண்டு நிறவப்பட்ட பாங்க் ஆப் நெடுங்காடி ஆகும். அப்பு நெடுங்காடி என்பவர் இந்த தனியார் வங்கியை நிறுவினார்.

1935-இல் நிறுவப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கி இந்தியாவின் தலைமை வங்கியாகும். இதன் தலைமையிடம் மும்பையில் உள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியப் பணிகள் எவை எனக் காண்போம்.

**இந்திய ரிசர்வ் வங்கி**

- ஒரு ரூபாய் நோட்டைத் தவிர பிற ரூபாய் நோட்டுகளையும் அச்சிட்டு வெளியிடுகிறது.
- கடன் மேலாண்மை
- வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுகிறது.
- அரசின் வங்கியாக செயல்படுகிறது.

ரிசர்வ் வங்கியின் தகவல்கள் அடங்கிய வாசிப்பு அட்டையைத் தயார் செய்யவும்.

பெயர் :

தோற்றம் :

பணிகள் :

## வங்கிகளின் செயல்பாடு



சொத்து விற்றதில் 5 இலட்சம் ரூபாய் என்னிடம் உள்ளது. அடுத்த வருடம் என் மகளின் உயர்கல்விக்காக இந்தத் தொகை தேவைப்படும். அதுவரை இந்தப் பணத்தில் இருந்து வருமானம் ஈட்ட விரும்புகிறேன்.

நான் ரூ 12 இலட்சத்துக்கு ஒரு வீடு வாங்க விரும்புகிறேன். என்னிடம் 5 இலட்சம் மட்டும் தான் உள்ளது. மீதி உள்ள 7 இலட்சத்தைக் கடனாக வாங்கி, 15 ஆண்டுகளில் தவணை முறையில் கடனை அடைக்கலாம்.



இரண்டு சூழ்நிலைகளையும் ஆராயவும். இருவரின் தேவைகள் என்ன?

தனிநபர்களின் இத்தகைய தேவைகளை நிறைவேற்றுவது வங்கிகளே. வைப்புத் தொகையாளர்கள் மற்றும் கடன் பெறுவோருக்கு இடையில் இடைத் தரகர்களாக வங்கிகள் செயல்படுகின்றன. வங்கிகள் பொது விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படுகின்றன.

படத்தை உற்றுநோக்கி அட்டவணையை நிரப்புக

**முதலீட்டாளர்கள்** **கடன்பெறுவோர்**




| முதலீட்டாளர்கள் | கடன்பெறுவோர் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசிடமிருந்து வங்கிகள் வைப்புத்தொகையைப் பெறுகின்றன. வங்கிகள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வைப்புத்தொகையுடன் வட்டியும் சேர்த்துத் திரும்ப அளிக்கின்றது. இப்படிப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து வங்கிகள் தேவைப்படுபவர்களுக்கு பணம் கடனாக வழங்குகிறது. கடன் வாங்கியவர்கள் தொகையை வட்டியுடன் வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்துகின்றனர். வங்கித் தொழில் நடத்தும் தனிநபர் அல்லது நிறுவனம் வங்கியாளர் என்று அழைக்கப்படுகிறார்.

"வங்கிகள் முதலீட்டாளர்கள் மற்றும் கடன் பெறுவோர்களுக்கு இடையில் செயல்படும் இடைத்தரகர்கள்" – இக்கூற்றை நியாயப்படுத்துங்கள்.

விளம்பரங்களை உற்றுநோக்குங்கள்



படம் 11.3



படம் 11.4

இந்த விளம்பரங்களில் உள்ள பொதுவான செய்தி என்ன?

பணம் கடன் பெறும்போது கூடுதலாக திருப்பிச் செலுத்தவேண்டியதும், பணம் முதலீடு செய்யும்போது கூடுதலாகக் கிடைப்பதும் வட்டி எனப்படும்.

வைப்புத்தொகை மற்றும் கடனுக்கும் வட்டி உண்டு. கடன் பெறுவோரிடம் இருந்து வங்கி ஒரு குறிப்பிட்ட தொகையை வட்டியாகப் பெறுகிறது. இதிலிருந்துதான் வங்கியின் செயல்பாடுகளுக்கு வேண்டிய நிதியும் மற்றும் முதலீட்டாளர்களுக்கான வட்டியும் வழங்கப்படுகிறது.

மேலே தரப்பட்டுள்ள படங்களை உற்றுநோக்கி வைப்புத் தொகைக்கா? அல்லது கடனுக்கா? வட்டி விகிதம் அதிகம் என்று கண்டுபிடிக்கவும். ஏன் என்று விவாதிக்கவும்.

## வங்கிக் கணக்கைத் தொடங்குவோம்



*"எனக்கு வங்கிக் கணக்கு தொடங்க என் அம்மாவுடன் வங்கிக்கு நாங்கள் சென்றோம். எனது பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை நகல் மற்றும் பிற ஆவணங்களையும் அம்மா கையில் வைத்திருந்தார்கள்,. கணக்கு தொடங்குவதற்கான படிவத்தை நிரப்பிக் கையெழுத்திட்டேன். நிரப்பப்பட்ட விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் அம்மா அதிகாரியிடம் ஒப்படைத்தார்".*

வங்கிக் கணக்கு தொடங்கச் சென்ற ரியாவின் அனுபவத்தை வாசித்தீர்கள் அல்லவா? நீங்களும் வங்கிக்கணக்கு தொடங்கிய அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

கணக்குத் தொடங்குவதற்காக நிரப்பப்பட்ட விண்ணப்பத்துடன் வங்கியில் சமர்ப்பித்த ஆவணங்கள் என்னென்ன? அவற்றைப் பட்டியலிடவும்.

- 
- 

### வங்கிக் கணக்கு என்றால் என்ன?

வங்கிக் கணக்கு என்பது பணப்பரிமாற்றங்களை நடத்துவதற்காக வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான ஒரு நடைமுறையாகும். இது வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றது.

**வங்கிக் கணக்குப் புத்தகம்**

வங்கிக் கணக்குப் புத்தகம் என்பது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான பணப் பரிமாற்றத்தைப் பதிவு செய்யும் பதிவேடு ஆகும். இதில் வாடிக்கையாளரின் பெயர், முகவரி, கணக்கின் தன்மை, கணக்கு எண் மற்றும் வங்கி தொடர்பான அடிப்படைத் தகவல்கள் காணப்படும்.

பத்து வயதுக்கு மேற்பட்ட யாரும் தங்கள் சொந்த வங்கிக் கணக்கைத் தொடங்கலாம். பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் கூட்டுக் கணக்கைத் தொடங்கலாம். தற்போது வங்கிக்கணக்குகளை இணைய வழியிலும் தொடங்கலாம்.

மாணவர்களுக்கு வங்கி கணக்கினால் ஏற்படும் பயன்கள் என்னென்ன? அவற்றைக் கண்டுபிடித்து பட்டியலிடவும்.

- பல்வேறு உதவித் தொகைகளைப் பெற்றுக்கொள்ள.
- 
- 
- 

## பல்வேறு வகையான கணக்குகள் மற்றும் வைப்புத் தொகைகள்



படம் 11.5

ஆகாஷ் : டீச்சர்! ரியாவின் வங்கிக்கணக்குப் புத்தகத்தில் அவளது போட்டோ மட்டுமே உள்ளது. ஆனால் எனது வங்கிக்கணக்குப் புத்தகத்தில் எனது போட்டோவும் என் அம்மாவின் போட்டோவும் உள்ளன. ஏன்?

டீச்சர்: ஆகாஷ்! இரண்டுமே இரண்டு வகையான கணக்குகள் ஆகும்.

வாடிக்கையாளர்களின் அடிப்படையில் வங்கிக் கணக்குகளை முக்கியமாக மூன்றாக வகைப்படுத்தலாம்

**வங்கிக்கணக்கு**

| தனிநபர் கணக்கு<br>Individual Account | கூட்டுக் கணக்கு<br>Joint Account | நிறுவனக் கணக்கு<br>Institutional Account |
|---|---|---|
| ஒரு தனிநபரின் பெயரில் தொடங்கப்படும் கணக்கு அந்த நபருக்கு மட்டுமே அந்தக் கணக்கில் வங்கியில் பணப்பரிமாற்றம் செய்யமுடியும். | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களோ அல்லது நிறுவனங்களோ சேர்ந்து தொடங்கும் கணக்கு கூட்டுக் கணக்கு எனப்படும். | ஒரு நிறுவனத்தின் பெயரில் தொடங்கப்படும் கணக்கு. அந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபர் கணக்குத் தொடங்கி பணப்பரிமாற்றங்கள் செய்வது. |

பல்வேறுபட்ட கணக்குகள் பற்றி அறிந்து கொண்டீர்கள் அல்லவா? வைப்புத்தொகையையும் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப பலவகைப்படுத்தலாம். அவை எவை எனப் பார்ப்போம்.

**வைப்புத்தொகைகள்**

- சேமிப்பு வைப்பு (Savings Deposit)
- நடப்பு வைப்பு (Current Deposit)
- நிலையான வைப்பு (Fixed Deposit)
- தொடர் வைப்பு (Recurring Deposit)

### சேமிப்பு வைப்பு (Savings Deposit)

தனிநபர்களிடம் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் முதலீடு இதுவாகும். தனிநபர் மற்றும் கூட்டுக்கணக்கு வைத்திருப்பவர்கள் சேமிப்பு வைப்பு கணக்கைத் தொடங்கலாம். இந்த முதலீடுகளுக்கு வங்கி குறைந்த வட்டி விகிதமே வழங்குகிறது. எத்தனை முறை வேண்டுமானாலும் பணத்தைச் சேமிக்கலாம். ஆனால் பணத்தை எடுப்பதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

### நடப்பு வைப்பு (Current Deposit)

இது வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்களை இலக்காகக் கொண்ட முதலீடு ஆகும். ஒரே நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணப்பரிமாற்றம் செய்யலாம். பணம் செலுத்தவும் எடுக்கவும் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. இந்த முதலீடுகளுக்கு வட்டி கிடையாது.

### நிலையான வைப்பு (Fixed Deposit)

நிலையான வைப்பு என்பது ஒரே தவணையாக முதலீடு செய்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வட்டியுடன் திரும்பப் பெறும் முறையாகும். இத்தகைய வைப்புத் தொகைகளுக்கு வங்கி அதிக வட்டி வழங்குகிறது.

### தொடர் வைப்பு (Recurring Deposit)

இது மற்றொரு வகையான நிலையான வைப்புத் தொகை ஆகும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலையான தொகையை சீரான இடைவெளிகளில் (தினசரி, வாராந்திர, மாதாந்திர) இந்தக் கணக்கில் முதலீடு செய்யப்படுகிறது. முதிர்வு தேதிக்குப் பிறகு தான் இந்தத் தொகையை எடுக்க முடியும். சேமிப்பு வைப்பைவிட அதிக வட்டி கிடைக்கிறது.

பயிற்சித்தாளை நிரப்புக.

| முதலீடுகள் | கால அளவு | வட்டி | திரும்பப் பெறுதல் |
|---|---|---|---|
| சேமிப்பு வைப்பு | இல்லை | ........................... | கட்டுப்பாடுகள் உண்டு |
| நடப்பு வைப்பு | இல்லை | ........................... | ........................... |
| ........................... | உண்டு | ........................... | முதிர்வு காலத்திற்குப்பின் மட்டும் |
| தொடர் வைப்பு | ........................... | அதிக வட்டி | ........................... |

பரிசுத் தொகையாகவும் கைச் செலவு பணமாகவும் நீங்கள் பெரும் பணத்தை எவ்வாறு பாதுகாக்கிறீர்கள்? இவற்றை சேமித்து வைத்தால் எதிர்கால தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் அல்லாவா? சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க பள்ளியில் ஏதேனும் அமைப்புகள் உள்ளனவா? கேட்டு அறியவும்.




1970 ன் தொடக்கத்தில் பள்ளி மாணவர்களுக்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு சேமிப்புத் திட்டம் சஞ்சைகா திட்டம் ஆகும். இத்திட்டம் தற்போது மாணவர் சேமிப்புத் திட்டம் (Students Savings Scheme) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும் வங்கிச் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் இது செயல்படுகிறது. இத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு எண்ணுடன் வங்கிக் கணக்குப் புத்தகமும் கொடுக்கப்படும்.

## பலவகையான வங்கிகள்

Union Bank of India

केनरा बैंक Canara Bank

SBI

KERALA BANK
Kerala State Co-operative Bank

படம் 11.6

படத்தொகுப்பை உற்றுநோக்குங்கள்.

இந்த வங்கிகளின் பெயர்களைக் கேட்டிருக்கிறீர்களா? உங்களுக்குத் தெரிந்த வேறு வங்கிகளின் பெயர்களை எழுதுங்கள்

- 
- 
- 
- 

பல்வேறு வகையான வங்கிகளைப் பற்றி தெரிந்துகொள்வோம்.




## வணிக வங்கிகள்

வங்கித் துறையில் மிகவும் பழமையான மற்றும் ஏராளமான கிளைகளை உடைய வங்கிகள் வணிக வங்கிகள் எனப்படும். வைப்புத் தொகையை பெற்றுக்கொள்ளுதல் கடன் வழங்குதல் பாதுகாப்புப் பெட்டக வசதிகள், டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு மற்றும் இணைய வழி வங்கி போன்ற சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. வணிக வங்கிகளை பொதுத்துறை வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் என இரண்டு வகையாக பிரிக்கலாம். இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வணிக வங்கி பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஆகும்.

### பொதுத்துறை மற்றும் தனியார்துறை வங்கிகள்

முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் வங்கிகள் பொதுத்துறை வங்கிகள். எ.டு. யூனியன் வங்கி, கனரா வங்கி. தனி நபர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் வங்கிகள் தனியார் துறை வங்கிகள். இவ்வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டவை. எ.டு.தென் இந்திய வங்கி, பெடரல் வங்கி.

## கூட்டுறவு வங்கிகள்

விவசாயிகள், கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் சிறுதொழில் முனைவோருக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் எனப்படும். சுய உதவி மற்றும் பரஸ்பர உதவியை ஊக்குவித்தல், மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை வளர்த்தல், முதலீடுகளை அதிகரித்தல், தனியார் பணப் பரிமாற்றத்தில் சுரண்டலில் இருந்து மக்களைப் பாதுகாத்தல் போன்றவை கூட்டுறவு வங்கிகளின் முக்கிய லட்சியங்கள். கேரள அரசு உருவாக்கிய 'கேரள வங்கி' அத்தகைய வங்கிகளில் ஒன்றாகும். கிராமப்புறங்களில் இயங்கும் கூட்டுறவு வங்கிகள் கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகள்

என்றும் நகர்ப்பகுதிகளில் செயல்படும் வங்கிகளை நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**கேரள வங்கி**

கேரள அரசால் நிறுவப்பட்ட ஒரு கூட்டுறவு வங்கி தான் கேரள வங்கி. கேரள ஸ்டேட் கோ ஆப்பரேட்டிவ் பேங்க் லிமிடெட் தான் கேரள வங்கி என்ற பெயரில் அறியப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளையும் இணைத்து கேரளா வங்கி உருவாக்கப்பட்டது. இதன் தலைமையிடம் திருவனந்தபுரம் ஆகும்.

## வளர்ச்சி வங்கிகள்

தொழில் – வணிக – விவசாயத் துறைகளுக்கு நீண்டகால கடன்களை வழங்கும் வங்கிகள் வளர்ச்சி வங்கிகள் எனப்படும். எ.கா. இந்திய தொழில்துறை நிதிக்கழகம் (IFCI), தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி (NABARD).

பல்வேறு வகையான வங்கிகள் மற்றும் அவற்றின் சிறப்புகள் என்ற தலைப்பில் குழு விவாதம் நடத்தவும்.

## வங்கிச் செயல்பாடுகள் : மாறிவரும் நுட்பங்கள்




படம் 11.7

படத்தை உற்றுநோக்கவும். இதுபோன்ற புதுமையான நுட்பங்களின் பயன்பாட்டை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

நவீன காலத்தில் மிக வேகமாக மாறிவரும் துறை வங்கித் துறையாகும். காலகட்ட மாற்றத்துக்கு ஏற்ப வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கும் ஏராளம் நுட்பங்களை வங்கிகள்

நடைமுறைப்படுத்தி வருகின்றன. வங்கிக்கு நேரடியாகச் சென்று பணப்பரிமாற்றம் செய்யும் காலம் மாறிவிட்டது. மொபைல் செயலிகள் மற்றும் இணைய வங்கிச் சேவைகளின் வருகையால் வாடிக்கையாளர்கள் பல்வேறு வங்கிச் சேவைகளை எளிதில் பெறுகின்றனர். கையில் பணத்தை எடுத்துச் செல்லாமல் பணப்பரிமாற்றங்களைச் செய்ய இயலும் நிலைக்கு வங்கிச் செயல்பாடுகள் மாறியுள்ளன. அவை எவை என்று நாம் தெரிந்துகொள்வோம்.

### ATM (தானியங்கி பண எந்திரம்) (Automated Teller Machine)

வங்கிக்குச் செல்லாமலே எந்த நேரத்திலும் நம் வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுக்க ஏ.டி.எம் உதவுகிறது. CDM (Cash Deposit Machine) பண வைப்பு எந்திரம் வசதியைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் பணத்தை டெப்பாசிட் செய்யலாம்.

### UPI (ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்) (Unified Payments Interface)

பல வங்கி கணக்குகளை ஒரே மொபைல் செயலி பயன்பாடு வழியாகப் பயன்படுத்த அனுமதிக்கும் ஒரு டிஜிட்டல் அமைப்பு UPI ஆகும். வங்கிக்கோ ATM க்கோ செல்லாமல் இந்த அமைப்பு வழியாகப் பணப்பரிமாற்றம் செய்யலாம். எந்த நேரத்திலும் டிஜிட்டல் கருவிகள் வழியாகப் பணப்பரிமாற்றம் செய்யலாம். QR குறியீடு (Quick Response code), மொபைல் எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் பயன்படுத்தி பணப்பரிமாற்றம் செய்யலாம்.

#### கிரெடிட் கார்டு மற்றும் டெபிட் கார்டு



பணப்பரிமாற்றம் செய்ய வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் அட்டைகள் கிரெடிட் கார்டு மற்றும் டெபிட் கார்டுகள் ஆகும். கையில் பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம் என்பது தான் இதன் வழியாக வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் முக்கிய வசதியாகும். ஆனால் வங்கிக் கணக்கில் போதுமான அளவு பணம் இருந்தால் மட்டுமே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தமுடியும். வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்றாலும் பணப்பரிமாற்றம் செய்ய பயன்படுத்தப்படும் அட்டை கிரெடிட் கார்டு ஆகும். கிரெடிட் கார்டு உரிமையாளர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு வங்கிகள் பணம் கடனாக வழங்குகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தைத் திரும்பச் செலுத்தவில்லை என்றால் வங்கிகள் வட்டியை வசூலிக்கிறது.

டிஜிட்டல் கருவிகள்/அட்டைகள் பயன்படுத்தி பணப்பரிமாற்றம் மேற்கொள்ளகூடிய சூழ்நிலைகளைக் கண்டறிந்து எழுதவும்.

- 
- 
- 

## முன்னெச்சரிக்கையுடன் வங்கிச் செயல்பாடுகள்




செய்திகளை வாசித்தீர்கள் அல்லவா?

இன்று சைபர் உலகில் இதுபோன்ற மோசடிகள் பரவலாக நடைபெறுகின்றன. அவற்றைக் கண்டறிந்து தடுத்து நிறுத்த நாம் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

- ஏ.டி.எம். பின், ஓ.டி.பி. எண்ணை யாரிடமும் பகிர வேண்டாம்.
- சந்தேகத்திற்குரிய இணையவழி இணைப்புகளைத் திறந்து பார்க்க வேண்டாம்.
- வங்கிக்கணக்கு தொடர்பான விவரங்களைக் கேட்கும் தொலைபேசி உரையாடல்களுக்கு பதிலளிக்காமலிருக்க வேண்டும்.
- ஏ.டி.எம்.பின் நம்பரைப் போனில் சேமித்து வைக்க வேண்டாம்
- வலுவான கடவுச் சொற்களைப் பயன்படுத்தவும். கடவுச் சொற்களை அடிக்கடி மாற்றவும்.

இணையவழி பண மோசடி பற்றி புகார் அளிக்க தேவையான உதவி எண்கள் (Helpline) நடைமுறையில் உள்ளன.




படம் 11.8

இணைய வழி மோசடிக்கு எதிராக சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு சுவரொட்டியைத் தயார்செய்யவும்.

வங்கிகளின் தோற்றம் முதல் டிஜிட்டல் வங்கி முறை வரையுள்ள நவீன நுட்பங்கள் பற்றி நாம் அறிந்து கொண்டோம் அல்லவா? பொருளாதார முன்னேற்றத்தை அடைவதில் வங்கிகளின் பங்கு விலைமதிப்பற்றது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி வங்கி சேவைகள் மற்றும் பணப் பரிமாற்றங்களை மிகவும் எளிமையாக மாற்றியுள்ளது. இதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வங்கி சேவைகள் எளிதில் கிடைத்துள்ளது. இக்கால கட்டத்தில் வங்கிச் செயல்பாடுகளில் அதிகக் கவனமும் நுணுக்கமும் கட்டாயத் தேவையாகும்.

## தொடர் செயல்பாடுகள்

- உங்கள் பள்ளி தலைமையாசிரியருடன் நேர்காணல் நடத்தி பள்ளியிலுள்ள பல்வேறு கணக்குகள் பற்றி அறிந்து பட்டியலிடவும்.
- வங்கிக்கு நேரில் சென்று அங்கு நடைபெறும் பொருளாதாரச் செயல்பாடுகளை உற்றுநோக்கி குறிப்பு தயார்செய்க.
- வங்கி மோசடி தொடர்பான செய்திகளைத் திரட்டி சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் ஒரு விழிப்புணர்வு வகுப்பு ஏற்பாடு செய்யவும்.
- நிதிநிறுவனங்கள் தொடர்பான சின்னங்களை (Logos) திரட்டி எனது சமூக அறிவியல் ஆய்வு புத்தகத்தில் சேர்க்கவும்.
- கீழே தரப்பட்டுள்ள தேவைகளுக்கு என்ன வகையான வங்கிக்கணக்கு பொருத்தமானது என்பதைக் கண்டறிந்து பணித்தாளை நிரப்பவும்.

| சூழல் | வங்கிக்கணக்கு |
|---|---|
| சீட்டுப்பணம் மூலம் கிடைத்த பணத்தை குழந்தைகளின் எதிர்கால கல்விக்காக வங்கியில் முதலீடு செய்தல் | நிலையான வைப்பு |
| மாதம்தோறும் கிடைக்கும் ஓய்வூதியத் தொகையை முதலீடு செய்யவும் செலவினங்களுக்காக பணம் எடுக்கவும். | |
| வியாபாரத்தில் இருந்து கிடைக்கும் தினசரி வருமானத்தை முதலீடு செய்வதற்கும் தேவைக்கு ஏற்ப திரும்பப் பெறவும். | |
| சொந்தமாக ஒரு வீடு என்ற கனவை நனவாக்க மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தோகையை முதலீடு செய்தல் | |







12

# ஜப்பான் : வரலாறும் நிகழ்காலமும்



1945 ஆகஸ்ட் 6, ஸடாகோ ஸசாகிக்கு இரண்டு வயது. ஹிரோஷிமாவிலிருந்து இரண்டு கிலோ மீட்டார் தொலைவில் ஸசாகி வசித்து வந்தார். ஆகாயத்தில் விமானங்கள் பறக்கும் காட்சியை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அந்த ஆர்வம் சிறிது நேரத்தில் மறைந்துவிட்டது. விமானத்திலிருந்து பொழிந்த குண்டுகளின் தீச்சுவாலை இலட்சக்கணக்கான மனிதர்களின் உயிரைப் பறித்தன. சிறிது தூரத்திலிருந்த ஸசாகியோடு அந்த தீச்சுவாலைகள் கருணை காட்டின.

காலம் கடந்து சென்றது. அணுகுண்டிலிருந்து வந்த கதிர்வீச்சுகள் சுற்றியுள்ளவர்களைக் கொன்று கொண்டேயிருந்தது. ஸடாகோ ஸசாகிக்கும் காலம் கருணை காட்டவில்லை. இரத்தப் புற்றுநோய் வடிவில் ஸசாகியையும் அணுக்கதிர்வீச்சுகள் தாக்கின.

மருத்துவமனை படுக்கையிலும் ஸசாகி நம்பிக்கையைக் கைவிடவில்லை. மருத்துவமனையில் தன்னுடைய தோழி சிசுகோ ஹமாமோட்டோ வருவதுண்டு. ஒரு நாள் ஹமோமோட்டோ காகிதம் வைத்து கொக்கு செய்வதை ஸசாகிக்குக் கற்றுக் கொடுத்தார். ஆயிரம் கொக்குகளைச் செய்தால் அவர்கள் விரும்பும் காரியம் நடக்குமென்ற ஒரு நம்பிக்கை ஜப்பானியர்களுக்கிருந்ததது. அது ஸசாகிக்கு உற்சாகத்தைத் தந்தது. ஆயிரம் கொக்குகளைச் செய்வேன், நான் குணமடைவேன் என்று அவள் நம்பினாள்.

அன்று காகிதம் கிடைப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. காகிதத்திற்காக அவள் அடுத்த அறைகளிலும் ஏறி இறங்கினாள். பள்ளியிலிருந்து நண்பர்கள் காகிதங்கள் கொண்டு வந்தனர். ஆனால் விதி வேறோன்றாகயிருந்தது. ஆயிரம் கொக்குகள் என்ற நம்பிக்கையை நிறைவேற்ற நோய் ஸசாகியை அனுமதிக்கவில்லை. 644 கொக்குகள் மட்டுமே செய்து முடித்து 1955 அக்டோபர் 25 அன்று ஸசாகி இந்த உலகிலிருந்து விடை பெற்றாள். அன்புத் தோழி சிசுகோ ஹமாமோட்டோ கண்களில் கண்ணீருடன் ஸசாகிக்காக ஆயிரம் கொக்குகளை செய்துமுடித்தார். அந்த அன்பான கொக்குகளுடன் ஸசாகி அடக்கம் செய்யப்பட்டாள்.

ஆதாரம் ஸடாகோ ஆண்ட் தௌசண்ட் பேப்பர் கிரைன்ஸ்.

இன்றும் நம்பிக்கையின் சின்னமாக நிற்கும் காகித கொக்குகளுக்கு ஸடாகோ ஸசாகியின் வேதனையுள்ளது... நம்பிக்கையுள்ளது.... அதனுடன் கூடிய அமைதிக்கான புன்னகையுமுள்ளது.

உலக மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிகழ்ச்சியே 1945 ஆகஸ்ட் 6 ஆம் தேதி ஜப்பானில் ஹிரோஷிமாவிலும் ஆகஸ்ட் 9 ஆம் தேதி நாகசாகியிலும் அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது. அதன் விளைவுகளை இன்றும் ஜப்பானியர்கள் அனுபவித்து வருகின்றனர். அணுகுண்டு ஆக்கிரமிப்பில் அழிக்கப்பட்ட ஜப்பான் விரைவாக மீண்டுவந்து இன்று உலகின் வளர்ந்த நாடுகளில் ஒன்றாக தலை நிமிர்ந்து நிற்கின்றது.

ஜப்பான் வரலாற்றை அறிந்துகொள்ள உங்களுக்கு ஆர்வமில்லையா?... நாம் கண்டுபிடிப்போம்.

கிழக்கு ஆசியாவின் பசிபிக் கடற்கரையிலுள்ள ஒரு தீவுக் கூட்டம்தான் ஜப்பான். சுமார் ஆயிரம் தீவுகள் ஜப்பானில் உள்ளன.

நிலப்படம் 12.1 இல் ஜப்பானின் இருப்பிடத்தைக் கவனியுங்கள். முக்கியமான தீவுகளைக் கண்டுபிடித்து எழுதவும்.



நிலப்படம் 12.1

- ஹொக்கைடோ
- 
- 
- 

இந்த நான்கு முக்கிய தீவுகளில்தான் ஜப்பான் மக்களின் பெரும்பாலோனோர்கள் வசிக்கின்றனர். பரந்த கடற்கரைகள், உயர்ந்த மலைத்தொடர்கள், மலைகள் ஆகியவை ஜப்பானிய இயற்கையமைப்பின் சிறப்புகளாகும். எப்போதும் பூமியதிர்ச்சிகளையும் எரிமலை வெடிப்புகளையும் எதிர்கொள்ளும் நாடாகும் ஜப்பான். அங்குள்ள நதிகள் பொதுவாக செங்குத்தாக ஒழுகுவதும் வேகம் கூடியவைகளுமாகும்.. ஜப்பானில் மிகவும் நீளமான நதி ஷினானோ.


படம் 12.1 ஷினானோ நதி


படம் 12.2 ஜப்பானில் உள்ள எரிமலை

உலக வரைபடத்தைப் பார்த்து ஜப்பானின் அண்டை நாடுகளைக் கண்டுபிடித்து எழுதவும்.

- ரஷ்யா
- 
- 
- 

## ஜப்பானின் வரலாறு



படம் 12.3 ஜப்பானிய புத்தர் சிலை

ஜப்பானின் அண்டை நாடுகளான சீனாவும், கொரியாவும் பண்டைய காலம் முதல் அதன் கலாச்சாரத்தில் தாக்கம் செலுத்தியுள்ளன. சீன எழுத்து முறையும், தத்துவச் சிந்தனையும், இலக்கியமும் கொரியா வழியாக ஜப்பானை அடைந்தன. இவ்வாறாகவே புத்தமதம் ஜப்பானில் பரவியது

### இலக்கியம்




படம் 12.4 ஜப்பானிய எழுத்து

ஜப்பானின் பாரம்பரிய வரலாற்றை விவரிக்கின்ற படைப்பே CE எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கொஜிகி (Kojiki). வரலாறும் புராணமும் கலந்த முறையில் இது எழுதப்பட்டுள்ளது. CE 10ஆம் நூற்றாண்டில் சீனக் கலாச்சார செல்வாக்கிலிருந்து சுதந்திரமாவதற்கான முயற்சிகளை ஜப்பான் தொடங்கியது. இது தனித்துவமான கலாச்சாரம் உருவாக ஜப்பானுக்கு உதவியது. சீன எழுத்து முறையை எளிதாக்கி, ஜப்பானிய மொழிக்கு ஒரு புதிய எழுத்து முறையை உருவாக்கினர்.கதைகளும் கவிதைகளும் உட்பட பல இலக்கியப் படைப்புகள் ஜப்பானிய மொழியில் எழுதப்பட்டன. அரண்மனை எழுத்தாளரான முரஸாகி ஷிகிபு எழுதிய த டேல் ஆப் ஜென்ஜி (The Tale of Genji) இவற்றில் மிகவும் பிரபலமானது.

### ஷிண்டோயிசம்

ஜப்பானின் பாரம்பரிய மத நம்பிக்கையே ஷிண்டோயிசம். 'தெய்வத்தின் பாதை' என்பதே ஷின்டோ என்ற வார்த்தையின் பொருள். தெய்வங்கள் பொதுவாக 'காமி' என்று அழைக்கப்பட்டன. சூரிய தேவதையான 'அமதரேசு' இவர்களில் முக்கியமானவர். சூரிய தேவதையின் வாரிசுகளாகவும் பூமியிலே பிரதிநிதிகளாகவும் பேரரசர்கள் கருதப்பட்டனர். ஷிண்டோயிசத்தின் தலைவர்களாக பேரரசர்கள் இருந்தனர்.



படம் 12.5 ஷின்டோ ஆராதனை ஆலயம்

### உணவு

பண்டைய காலம் முதல் அரிசி ஜப்பானியர்களின் முக்கிய உணவாக இருந்தது. இந்த சமைத்த உணவு 'கோகன்' (Gohan) என்று அழைக்கப்பட்டது. சிறு தானியங்களையும் (Millets) அவர்கள் பயன்படுத்தினர். ஊட்டச்சத்து உணவாக மீன் ஒரு பகுதியாக இருந்தது. பச்சையான மீன் உணவு வகை 'சுஷி' இன்று உலகமெங்கும் மக்கள் விரும்பும் ஜப்பானிய உணவாக உள்ளது. சீன தாக்கத்தின் விளைவாக நூடுல்ஸும் அவர்களது உணவின் பகுதியானது.



படம் 12.6 சுஷி

## ஆடை

ஜப்பானின் பாரம்பரிய ஆடை கிமோனோ. அரச சபைகளில்தான் இது முக்கியமாக அணியப்பட்டது. பெண்களும் ஆண்களும் கிமோனோ (Kimono) என்ற ஆடையை அணிவதுண்டு. சீனர்களிடையே பிரபலமாயிருந்த நீண்ட அங்கிகளைப் (Long robe) போன்றது இது.



படம் 12.7
கிமோனோ ஆடை

பணித்தாளை நிரப்பவும் .

| ஜப்பான் | |
|---|---|
| இலக்கியம் | ......................., ........................... |
| ............................................ | பாரம்பரிய மத நம்பிக்கை |
| உணவு | ......................., ........................... |
| ஆடை | ................................................ |

## ஷோகன் ஆட்சி

நீண்டகாலமாக பேரரசர்கள் ஜப்பானை ஆட்சி செய்து வந்தனர். ஆனால் 12 ஆம் நூற்றாண்டில் நாட்டின் ஆட்சி பேரரசர்களிடமிருந்து ஷோகன்கள் என்று அழைக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரிகளின் கைகளுக்குச் சென்றது. பெயரளவில் ஆட்சியாளரான பேரரசரின் பெயரில் ஷோகன்கள் ஆட்சியை நடத்தினர். இந்த ஆட்சியின் கீழ் ஜப்பானை 250-க்கும் மேற்பட்ட மாகாணங்களாகப் பிரித்தனர். அவற்றின் கட்டுப்பாடு டேய்மியோ (Daimyo) என்று அழைக்கப்படும் பிரபுக்களின் அதிகாரத்தின் கீழானது. அரசாங்கத்தில் செல்வாக்கு இருந்த போர் வீரர்கள் பிரிவே சாமுராய்கள் (Samurais). இவர்கள் ஷோகன்களுக்கும் டேய்மியோக்களுக்கும் சேவை செய்தனர். 19 ஆம் நூற்றாண்டில் நடந்த 'மெய்ஜி மறுசீரமைப்பு' ஷோகன் ஆட்சி ஜப்பானில் முடிவுக்கவர காரணமானது.



படம் 12.8
சாமுராய் போர் வீரன்

### டெய்மியோக்கள்

ஜப்பானில் இருந்த நிலப்பிரபுக்களே டெய்மியோக்கள். 12-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை ஜப்பானில் மாகாணங்களைக் கட்டுப்படுத்தினவர்கள் இவர்களாவர்.

## மெய்ஜி மறுசீரமைப்பு

அந்நிய ஆதிக்கத்திலிருந்து தப்பிய ஆசிய நாடு ஜப்பான். பல நாடுகளும் ஜப்பானுடன் வர்த்தக உறவுகளை ஏற்படுத்த முயன்றன. அமெரிக்கரான கமாண்டர் மேத்யூ பெர்ரி 1853 - இல் ஜப்பானுக்கு வந்து அவர்களுடன் வர்த்தக அனுமதி பெற்றார். மேத்யூ பெர்ரியின் வருகை ஜப்பானின் அரசியல் வரலாற்றை மாற்றியது.


படம் 12.9 மேத்யூ பெர்ரியின் வருகை – சித்தரிப்பு

1868 -இல் நடந்த ஒரு நடவடிக்கையால் ஷோகன்கள் அதிகாரத்திலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்படவும் பேரரசர் முக்கிய அதிகார மையமாக திரும்பி வரவும் முடிந்தது. எடோ நகரம் தலைநகராமாக அறிவிக்கப்பட்டது. பின்னர் இதற்கு டோக்கியோ (Tokyo) என்று மறுபெயரிடப்பட்டது. இது 'மெய்ஜி மறுசீரமைப்பு' (The Meiji Restoration) என்று அழைக்கப்படுகிறது.

### ஆட்சியில் ஏற்பட்ட மாற்றம்

'ஃபுக்கோகு க்யோஹி' (Fukoku Kyohei)- 'செழிப்பானநாடு, வலிமைமிக்க இராணுவம்' என்ற கருத்திற்கு முக்கியத்துவம் அளித்து புதிய கொள்கைகளுக்கு மெய்ஜி அரசு துவக்கமிட்டது. நாடு வலிமையடைவதற்காக மெய்ஜி அரசு புதிய ஆட்சிமுறையை நடைமுறைப் படுத்தியது. இராணுவமும், அலுவலர்களும் பேரரசரின் நேரடி கட்டுபாட்டிற்குள் வந்தனர். 20 வயது நிரம்பிய அனைத்து இளைஞர்களும் குறிப்பிட்ட காலயளவு வரை இராணுவ சேவை செய்ய கட்டாயப் படுத்தப்பட்டனர்.

### கல்வி முறை

1870 ஆம் ஆண்டில் ஜப்பான் புதிய கல்வி முறையைத் துவங்கியது.

**கல்வி முறையில் கொண்டுவந்த மாறுதல்கள்**

- ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டது.
- மேலை நாடுகளை மாதிரியாகக் கொண்ட பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது.
- நாட்டுப்பற்று மற்றும் ஜப்பான் வரலாறு பற்றிய கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.
- குழந்தைகள் பெற்றோர்களை மதிக்கவும் நாட்டிடம் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவும், பாடநூற்கள் முக்கியத்துவம் அளித்தது.

## பொருளாதார முன்னேற்றம்

மெய்ஜி சீர்திருத்தங்களில் மற்றொரு முக்கிய அம்சம் பொருளாதரத்தில் நவீன மயமாக்கல் ஆகும்.

**பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்த காரணிகள்**

- 1870-72 இல் டோக்கியோவிற்கும் யோகோகாமா துறை முகத்திற்கும் இடையே முதல் ரயில்பாதை கட்டப்பட்டது.
- துணி நெசவு இயந்திரங்கள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.
- தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வெளிநாட்டு தொழில் நுட்ப வல்லுநர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஜப்பானிய மாணவர்கள் வெளிநாடுகளுக்கு படிக்க அனுப்பப்பட்டனர்.

நவீன மயமாக்கலின் பகுதியாக பல தொழில்கள் ஜப்பானில் தொடங்கப்பட்டன. ஐந்து பேருக்கு குறைவாக வேலையில் அமர்த்தும் சிறு தொழிற்சாலைகள் முதல் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலையில் அமர்த்தும் பெரிய தொழிற்சாலைகள் வரை ஜப்பானில் நிறுவப்பட்டன. இவ்வாறு ஒரு நவீன தேசிய அரசை உருவாக்குவதில் ஜப்பான் வெற்றிபெற்றது.

மெய்ஜி மறுசீரமைப்பு முதல் பொருளாதார சக்தியாக வளர்ந்தது வரையுள்ள ஜப்பானின் முன்னேற்றத்தைக் குறிக்கும் தகவல்களைச் சேகரிக்கவும். குழுக்கள் அடிப்படையில் இந்தத் தகவல்கள் உள்ளடக்கிய சுவரொட்டி தயாரிக்கவும்.

## ஜப்பானில் பேரரசைக் கட்டியெழுப்பும் முயற்சிகள்

மெய்ஜி மறுசீரமைப்புடன் தேசத்தை மையமாகக் கொண்ட தேசியம் ஜப்பானில் வளர்ந்து வந்தது. தங்களின் பேரரசு சீனாவிலும் பிற ஆசிய பகுதிகளிலும் விரிவுபடுத்துவதற்காக ஜப்பான் போர்களில் ஈடுபட்டது. அண்டை நாடுகளான தாய்வானையும், கொரியாவையும் கைப்பற்றி காலனி ஆதிக்க சாம்ராஜ்யத்தை நிறுவியது. தங்களின் கலாச்சாரம் மற்றும் கொள்கைகளின் உறைவிடமான சீனாவையும், ஐரோப்பிய சக்தியான ரஷ்யாவையும் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது. பேரரசுகள் உருவாக்குவதற்கான அவர்களுடைய தொடர் முயற்சிகள் கூடுதல் போர்களுக்கு வழிவகுத்தது.

**உலகப் போர்கள்**

20-ஆம் நூற்றாண்டில் மனித வரலாற்றில் மிகவும் பயங்கரமானதும் மாற்றங்களைக் கொண்டு வந்ததுமான இரண்டு போர்களே முதலாம் உலகப் போரும் (1914-1918) இரண்டாம் உலகப் போரும் (1939-1945). இரண்டாம் உலகப் போரில் தான்அணுவெடிகுண்டு முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் அமெரிக்காவின் பேர்ல் ஹார்பரைத் (முத்துத் துறைமுகம்) தாக்கியது. அமெரிக்கா ஜப்பானின் ஷிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அணுகுண்டுகள் வீசுவதற்கு இது காரணமானது.

அணுகுண்டின் உபயோகம் ஜப்பானில் மிக பயங்கரமான நாச நஷ்டத்தையும், துன்பத்தையும் ஏற்படுத்தியது. போருக்குப் பிறகு அமெரிக்க ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஜப்பானின் இராணுவத்தை நீக்கி விட்டு ஒரு புதிய அரசியலமைப்பு நடைமுறையில் வரவும் செய்தது.


படம் 12.10 அணுகுண்டு வீச்சு


படம் 12.11 அணுகுண்டு வீசப்பட்ட பின்புள்ள ஷிரோஷிமா

பேரரசு உருவாக்கத்திற்காக ஜப்பான் மேற்கொண்ட முயற்சிகளைப் பட்டியலிடவும். இது ஜப்பானின் வளர்ச்சியை எவ்வாறு எதிர்மறையாகப் பாதித்தது என்பதைப் பகுப்பாய்வு செய்யவும்.

இரண்டாம் உலகப் போரில் சீரழிக்கப்பட்ட ஜப்பான் மிகவும் விரைவாக முன்னேற்றத்தின் பாதைக்குத் திரும்பி வந்தது. இது 'போருக்குப் பின் அதிசயம்' என்று சிறப்பிக்கப்படுகிறது. தலைநகரமான டோக்கியோவில் 1964 இல் ஒலிம்பிக்கை நடத்தியது ஜப்பானின் மீண்டு வரவின் அறிவிப்பாகயிருந்தது. தொழில்துறையும் வர்த்தகத்துறையும் மிக வேகமாக வளர்ந்தன. இதே காலகட்டத்தில் துவங்கப்பட்ட மணிக்கு 200 மைல் வேகம் வரை ஓடும் புல்லட் ரயில் நெட்வொர்க் ஜப்பானின் தொழில் நுட்பத் திறமைக்குச் சான்றாக உள்ளது. 1970 களில் ஜப்பான் உலகின் ஒரு முக்கிய பொருளாதார சக்தியாக வளர்ந்தது. அரசியல் மற்றும் தொழில் நுட்பத் திறன்களைப் பயன்படுத்தி எவ்வாறு உலகப் பொருளாதார சக்திகளில் ஒன்றாக மாறலாம் என்பதற்கு ஜப்பான் ஒரு மாதிரியாகும்.


படம் 12.12 ஜப்பான் நகரம்

## தொடர் செயல்பாடுகள்

- ஸடாகோ கொக்குகளைச் செய்து சமாதானச் செய்தியை எழுதி வகுப்பை அலங்கரிக்கவும்.
- போர் எதிர்ப்புப் பேரணிக்குத் தேவையான முத்திரை வாக்கியங்கள் அடங்கிய பலகைகளைத் தயாரிக்கவும்.
- ஜப்பானிய உணவு வகைகளின் படங்களையும், தகவல்களையும் சேகரித்து ஆல்பம்/ டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.
- "மெய்ஜி மறுசீரமைப்பும் ஜப்பானில் உண்டான மாற்றங்களும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***